தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உ௩	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௭௯ சருவசித்து—தை 1948—சனவரி	மலர் ௱

நன்றி பாராட்டு

நம் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தொண்டின் சிறப்பினையும், அதற்கேற்ற பொருள் வருவாய்க் குறைவினையும் கண்டுணர்ந்த (மதுரை மீனாட்சி பஞ்சாலைச் தலைவர்) செந்தமிழ்ச் செல்வர், திரு. கரு. முத்து. தியாகராயச் செட்டியார் அவர்கள் ஆயிரம் வெண்பொற் காசு மனமுவந்து அளித்துதவினார்கள்.

இப் பெருந்தகையாரது வள்ளன்மையினைப் பெரிதும் பாராட்டிக், காலத்தாற் செய்த இப் பேருதவிக்கு, நம் சங்கத்தின் என்றும் மாறா நன்றி யுணர்வினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திரு. செட்டியார் அவர்கள், தாம் பெற்ற இன்பம் இவ்வையம் பெறப், படைத்த பொருளிற் சிறந்த பகுதியைத் தண்டமிழ்த் தொண்டிற்கு ஆக்க ஆவல் கொண்டிருப்பவர்கள். கொண்ட ஆவலைச் செயலிற் காட்டி வருபவர்கள். உயர்ந்த செந்தமிழ்க் கல்விக்காக மதுரையில் ஒரு கல்லூரி நிறுவக் கருதி யுள்ளார்கள். திரு. செட்டியார் வாழ்வுகளும், அவர்கள் நினைவுகளும், அந் நினைவுகள் செயலுற்றெழும் நிலையங்களும், மேன்மேலும் ஓங்கி வளர்ந்து சிறப்புற்று விளங்குவனவாக.

திரு. செட்டியார் அவர்கள் காட்டிய நல் வழியினைப் பின்பற்றி, ஏனைய தமிழ்ப் பெருமக்களும் அருள்கூர்ந்து சிறப்புறுவார்களாக.

புதுக்கோட்டை அரசு

அரசியற் றுறையில் நமக்கு ஏதொரு தொடர்பும் இல்லை யென்றாலும், செந்தமிழ்ப் புரவலர்களாகிய இரண்டொரு தமிழரசுகளும மறைய நேரும்பொழுது, நாம் வருந்தாம லிருக்க முடியவில்லை. செந்தமிழ் நாட்டில் உள்ளதும், செந்தமிழ் மேம்பாட்டில் கருத்துக் கொண்டதும், பழங் காலந் தொட்டுச் செந்தமிழ்த் தாய்க்குத் தொண்டு பூண்டு பணியாற்றி வந்ததுமான அரசு இந்தப் புதுக்கோட்டை அரசு ஒன்றுதான். இத்தகைய ஒன்றும் மறைய நேர்ந்தது. நமது பழமை மறையவும், தமிழரசர் தாய்ப் பணி குறையவும் பொருட்டாகின்றதே யென்று கருத, நமக்கு இரக்கம் தோன்றல் இயற்கையே. நம் தமிழரசு வாழ இறைவன் திருவருள் துணை செய்வதாக.

* * * * *

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

1948, மார்ச்சு, 31 ஆம் நாள் நடைபெற்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவைக் கூட்டத்தில், பேரவைக் கூட்ட நிகழ்ச்சிகள் தமிழில் நடைபெற வேண்டும் என்று முடிவு செய்யப் பெற்றமை அறிந்து மகிழ்கின்றோம்.

இத்தகைய முடிபு நிறைவேறுதற்குத் துணையாயிருந்த நம் சங்க உறுப்பினர்களான திருவாளர் K M. சுப்பிரமணியம் அவர்கட்கும், இராவ் சாகிபு திருவாளர் பெ. கோவிந்தராசப் பிள்ளை அவர்கட்கும், ஏனைய அன்பர்கட்கும் நம் சங்கமும் தமிழகமும் நன்றி பாராட்டுங் கடப்பாடுடையன.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மட்டு மன்றிச், செந்தமிழ் நாட்டிலேயே அமைந்து ஆட்சி பெற்றிருக்கும் சென்னைப் பல்கலைக் கழகத்திலும் கூட்ட நிகழ்ச்சிகள், இவ்வாறு தமிழ் மொழியிலே நடைபெற வேண்டியது முறையும் பொருத்தமும் ஆகும். சென்னைப் பல்கலைக் கழகமும் இத்தகைய முடிவு செய்து செயலாற்றும் என நம்புகிறோம்.

காந்தி யடிகள்

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

காந்தி யடிகள், இயேசு, புத்தர் ஆகிய இவர்களைப் போன்ற ஒரு புண்ணியப் பொருள். மெய்யன்பி னுள்ளாகி யமரும் அரிய பொருள். காந்தி யடிகள், அருளொளியால் அனைத்தும் தெளிய உணர்ந்து, அறி வுருவாய், அழியாமை யடைந்து, அருமையில் எளிய அழகினை வாழ்க்கையில் காட்டி யருளிய வள்ளல். உலக மக்களுக் குரிய உடற்றுன் பமாகியஅடிமை முதலாய பிணிகளையும், உளத் துன்ப மாகிய அறியாமையினையும், உயிர்த் துன்ப மாகிய பவ வினையையும், காந்தி யடிகள் நீக்கும் மாண்பினையும் நீர் மையினையும் கண்டு, தெய்வ நலஞ் சான்றமெய் யுணர் வினரும், தவ ஞானச் செல்வரும், அக் காந்தியாரை, 'மகாத்துமா' என மன முவந்து அழைப்பா ராயினர். இவரது உடல் வனப்போடு கூடிய மன வனப்பு, அரசியல் நிலையினின்று காணுபவரது மனத்தின் ஊக்கத்தை உயர்த்திப் பார்வையையும் உறுதிப்படுத்தி, இன்ப நிறை வில் இருத்த வல்ல இயல்புடைய தாதலின், இவரை, அரசியல் உலகின் அற்புதமென அரசியலார் மொழிகுவர். அன்பும், அறமும் நிலையாக ஊன்றித் திண்மை பெறும் உள்ளத்தினைக் காந்தியார் இயல்பாய்ப் பெற்றவ ராதலான், கட் டற்ற இவரது ஆன்மா, அன்பைப் பெரிதும் விரும்பி, இவரது என்புக் கூட்டில் இணைந்திருப்பதைக், கண்டும், கேட்டும், உணர்ந்தும், மக்கள் ஆன்ம முன்னேற்றம் அடைந்தாரில்லை. இஃது எள்ளும் நீர்மை கொண்ட பித் துலக வாழ்விற் படியும் மயக்கமும் தியக்கமா மென்க. புவியில் வாழ்ந்த பழிக்காக மக்களிடத்தே அன்புரை கூறிய இயேசுவை முப்பது வெள்ளி பெற்றுச் சிலுவையு விட்டவனும், நல் லறிவு புகட்டிய நபி நாயகத்தை கல்லா லடித்தவனும், மனச் சான்றை மதித்து, அற வினை யாற்றி, அரு ளுரை புகன்று, உயிர் நலம் புரிந்த காந்தியாரை மனந் துணிந்து சுட்டவனும் மானிடனே. எனவே, இந்திய மக்களுக்குத் தந்தையா ராகிய இக் குடும்பியின் உடல் இடும்பைக்கே இலக்கமாயது பற்றி இறும்பூது கொள்

வதில் யாதும் பயனின்று. என்னெனின், தம் கருமஞ் சிதையாது, கண்ணோட வல்லார்க்கு விரி நீர் விய னுலகமே உரிமை யாகும். மற்றும், குற்ற மிலராய், இந்திய மக்களது நல முயர்த்த, அன்னார்க்கே அற வழியில் திண்மையாக முயன்று வாழ்ந்த காந்தி யடிகளைச் சுற்றமாகச் சுற்று முலகு என்பதில் ஐயப்பா டின்று. எனவே, இவ் வடிகளாரது வினை யுடல் வீழ்ந்தாலும், இவரது உயிர் வினையின் உண்மையினை உலகம் போற்று மாதலான், உலகின் உள்ளத்தில் இவ் வடிகள் இறவா நிலை யெய்திய வராய்த் திகழ்வ ரென்பது புல னுதல் கண் கூடு. அன்பும், பகைமையும் உலக வாழ்வில் வளர் மதி, தேய் மதி போன்று வருவ தியற்கை யியல் பாதலான், காந்தி அடிகளின் அன்பு விளக்கமாய வாழ்வு அதற்கு விலக் கன்றாம்.

மக்க ளுயிர்க ளெல்லாம், உணர்வு பாழ்பட்டு, அறி விழந்து, விலங்கினங்கள் போன்று, ஒருவரை யொருவர் வருத்தலும் வதைத்தலும், ஒறுத்தலும், பறித்தலும் முதலாய முயற்சிகளில் பகை மண்டும்படித் தலையிடுங் காலத்தில், உலகின்கண் அறம்பாடு நனி சிறக்கவும், போரிடையே அமைதி நிலைக்கவும், போர்பந்தர் எனும் பொன்னூர் நகர்க்கண், பிற வுயி ரோம்பும் மன் னுயிர் முதல் வராய், ஒரு வள ஒளி யுடைய அண்ணலார், சுக்கில ஆண்டு, புரட்டாசித் திங்கள், பதினெட்டாம் நாளில் (2—10—1869) தோன்றினார். வண்ண வுலகில் ஒளி யென்பது காந்தி யாகும். தா னுள னுய காலத்து, யாவராலும் நன்கு போற்றப்பட்டு, மிக்குத் தோன்றுத லுடைமையே ஒளி யாகும். இத் தகையவாறு மைத்து இருள் கூர்ந்த மன மாசுத் தீரத் தோன்றிய காந்தியாரது மனத்து விளக் கொளி பரவின், மானிடம் இறைத் தன்மையும் நலமு முறுதல் இயற்கைப் பொது விதி. ஒளி யென்பது புகழின் வேறெனுமாறு தோன்றக், காந்தியார் தமது தந்தை யாருக்குப் பெரும் புக ழெய்துமாறு, திறம் படக் கேட்ட தெய்வக் கேள்வி நலமும் கல்வியறிவு முடையராயும், தமது இளம்பிராயத்தே விளங்கினார். தந்தையாரை இளம் பிராயத்தே இழக்க நேரினும், அவர்பால் காந்தியார் உறு கண் செய்யாமை என்ற சீரிய கொள்கையின் அடிப்படை யான நுட்பத்தை உணர்ந்தார். பின்னர் வாழ்க்கை நிலை

யினைச் செம்மைப் படுத்த இங்கிலாந்துக்கு வழக் கறிஞருக் குரிய கல்விக்காகச் செல்ல நேர்ந்தும், அவர் தா யுரைக்குத் தினைத் துணையும் பிறழாது, பொய்ம்மையும், ஊ னுணவும், காமமும் கடிந்து, அற வாழ்க்கைச் செல்வ ராகவும் விளங் கினார். இதனால், அக வாழ்வுடன், புற வாழ்வை வென்று, மனித நாகரீகத்தை வளர்க்கும் வாய்ப்பும் காந்தியாருக்குக் கிடைக்கப் பெறவே, அவர், 'அடக்கும் ஐம் பொறியோடு கரணத்தப்புறம் கடக்கும் வால் உணர்வினுக் கணுகும் காட்சியாராக' விளங்கினார். வாழ்வின் உண்மைத்தூய்மைக் கும், உலகின் பொது நலத்திற்கும் பாடு படுவதே தம்முயிர் வினை யெனக் கொண்டு, அடிகள் இந்திய நாட்டிற்கு 1891-ஆம் ஆண்டில் வந்து, தங்கி, பின்னர் வாழ்க்கையின் பொருட்டுத் தென் னாப்பிரிக்காவுக்கு 1896-இல் சென்றார். ஆங்கு, மக்கள், மன வுலகின் நினைவுக் குழுவினைக் கண்டு, தெளிந்து, அமைதி யுற்று, மன வுரிமையோடு, உண் மையினை நாடும் ஊக்கங் கொண்டு, தம் வாணாளை உண் மைச் செயலானும், உள்ளத்தானும், கடமை யுணர்ச்சி யானும், மனைவி மக்களுடன் வாழ்ந்து, வழக் கறிஞர் தொழிலையும் புரிந்து வந்தார்.

காந்தியார் நிறைவான நல் லொழுக்கங் கொண்டு இல்லற மாகிய தொல் லறத்தை அற வியற்படி மாண் பய னெய்தும் வண்ணம் முறையாக நடத்தி நன் முயற்சியால் பொருளை யீட்டிப் பலருக்கும் பயன் பட வாழ்ந்ததால் காந்தியாரும், அவரது இல்லறக் கிழத்தி கஸ்தூரி அம்மை யாரும் வாழ்வும் உயிர்ப்பும் போல உள் ளார்ந்த உயிர்க் காதலோடு ஒன்றி வாழ்ந்தனர். இவர்களது இல்லறம் பே ரின்ப மயமாய் வயங்கவே இவரது மனை இன்ப விண் ணுயிற்று. இத் தகைய வாறு இல்லற வாழ்வில் விளங்கிய அறவொளி காந்தியாரின் பொது நல வாழ்வுக்கு ஓர் அரிய ஆற்றலை அளித்தது. அற வொளிக்கு அரணாய் நின்ற உண் மையும், மனத் திண்மையும், பொறுமையும், காந்தியாரது அகத்தே ஒளிர்ந்து உதிக்க, மன வாக்கினில் தட்டாமல், அருளொடு நிறைந்த இவரது உள் ளொளி இவருக்கு ஆசிரிய ராகத் தோன்றியது. கஸ்தூரி அம்மையாரும், நிறை காக்குங் காப்பே தலை யாய தெனக் கொண்டு, இல் லறம் ஆற்றினதினால், அம்மையார் ஈடுபட்ட பொது நலப்

பணிகள் யாவும் மா சற்றுத் திகழ்ந்தன. எனவே, இரு வரும் நிறை முறையுடன் தங்கள் தூய வாழ்வை இறைவ னுக்கே வேள்வி யாக்கி, வாழ்ந்து பிறரையும் வாழ்வித்த மருந் தாயும் விளங்கினுர்கள். மேலும், காந்தியார் உடல் உலகம் யாவும் ஐம் பூதத் தொகுப் பெனக் கருதி எண் ணிறந்த உயிர்கள் இறைவனது அருள் விளக்கங்கள் என உணர்ந்து, தம் மனச் சான்றுக்குப் பொருந்த அவைகளுக்கு அறி வாற்றலால் அன்புப் பணி செய்வதே தமது குறிக் கோளும், சீரிய தொண்டு மென மேற்கொண்டார்.

இவ்வாறு, காந்தியார் மனச் சான் ருென்றிற்கே கட்டுப்பட்டு, மனை வாழ்வு புரிந்து வருகையில், தென்னுப் பிரிக்காவில் அதிகாரக் கூட்டத்தினர், டிரான்சுவால் ஆசியாச் சட்டத்தையும் தலைவரியையும் வழக்கிற்கொண்டு வருவதினுல் ஆணவம் உறும் மனதில் மாறுபாட் டறிவைக் கண்டு கண்டித்து, நாட்டில் நிற வேறு பாடுகளை கிளப்பு வது பேதை மனமும் ஏழை மதியுமே எனக் கொண்டு, மனச் சான்றுள்ளபடி நடத்தல் மக்களது வாழ்வு என்றும், அதனை அடக்கு முறையால் துன்புறுத்துவது கொடிய தென்றும், மனச் சான்றின்படி நடக்கும் மக்கள் புறச் சட்டங்கட்குக் கட்டுப் பட்டவ ரல்லர் என்றும் மக்களுக்கு கூறி, ஆசியாச் சட்டத்தையும் தலை வரி விதிப்பதையும் எதிர்த்துச் சாந்தப் போராட்ட இயக்கத்தை அறமுது தவ மொடு அடிகளார் இயற்றினுர். மனத்தைப் புலன் வழி ஓட விடாது, அதன் ஆற்றலினுல் மன்னுயிர்கள் அருள் வழி ஒன்றி வாழும் வண்ணம், அவைகளுக்கு இன்ன லிழைக் காது காப்பதும், பகைவர் இழைக்கும் தீமையைப் பொறு த்து நிற்கும் அடக்கமே ஆக்க மென்பதும் இவ் வியக்கத் தின் உயிர் நாடிகள். இப் போராட்டத்தின் காரணமாகக், காந்தியார் சிறைப்பட்டனர். இச் சிறையில் பொறுமை யுடன் இவ ராற்றிய தவம், இந்திய மக்களுக்கு இரத்த வெறி யற்ற அமைதியால், உரிமை வாழ்வு வாழத் தன்னுட்சி என்ற வெற்றிக் கதிரை நல்கியது. இத் தவத்திற்குத் தென் னுப்பிரிக்காவில் வாழ்ந்து வந்த் தென் இந்தியத் தமிழ் மக்கள் உறு துணையா யிருந்து, தமது ஆண்மையையும், உழைப் பினையும் காந்தியாரது இயக்கத்திற்கே உரிமை யாக்கி, அதனைச் சிறப்பாக வாகையோடு நிகழ்த்தின முறை, இந் திய நாடு மன மிக மகிழ்வே கொள்ளும் உரிமை வாழ்வு

நிலையினை சேய்மைக் கண் நிறுத்தாது, நணிய தாக்கி யது. மற்றும் காந்தியடிகளைப் பசுந் தமிழ் தழீஇய சாயல ராகவு மாக்கியது. இதனுன் இவரது உள்ளம், உண்மை, அருள் விளக்கத்துக் கிடமாகி நிற்கவே, மக்களுயிரிடத்தும் மனங் கவரும் வண்ணம் ஒழுகலும், அமிழ் தன்ன தமிழ் மொழியின் எழிலை உணர்ந்து பயின்றதினுல் சுரந்து வரும் உரையாடலு மாகிய பெருந் திறனும் நடை நலனும் பெற் ருர். இந் நிலையில் அடிகள், தெளிவும், கனிவும் கொண்டு, உணர் வாட்சியின் இறுதி நிலை யாய அருள் நிலைப் பேற்றி னைப் பெறும் தெய்வப் பெற்றியராய்த் திகழ்ந்தார். சிறை யகத்தும் தவவேலிக் கண் ணிருந்த காந்தி யடிகளை யாதொரு நிபந்தனை யின்றி விடுவிக்கப் படவே, ஆங்கு சுமட்ஸ் என்பவரிடம் உயிர் நேய ஒருமைப் பாட் டுரிமை யும், நாட் டுரிமையும் எல்லா மக்களுக்கும் ஒத்த தென உடன் பட்டு நட் புரிமைச் சூளுறவு செய்து கொண்டனர். இதனுல், அடிகள் மக்களை மக்க ளென மதித்துப் பலருக் கும் பயன்பட வாழ்பவர் பண்பை, உலகு அன்பொடு பாராட்டும் என்ற உண்மையினையும், தீமையினை இழைத்து இகழும் பகைவரையும் பொறுத்தல் அறிவாளரது தொழில் என்பதையும் நிலை நிறுத்தினுர்.

காந்தி யடிகள், பின்னர், தமது தாய் நாட்டிற்கு வந்து, நாட்டின் அடிமைத் தளையை அறுக்க, ரௌலட் சட்டத்தை எதிர்த்து, இந்தியா முழுவதும் உண்மையின் உறை விடம் காணும் அறப் போ ரியக்கத்தையும், ஒத் துழையாமைப் போராட்டத்தையும், அயல் நாட்டு ஆடைகளைத் தவிர்க்கும் இயக்கத்தையும், ஆரம்பித்து அவைகளை வாகை யுற முடித்து, மிகை செய்யும் பகைவரையும் வெல்லும் வழி யினைக் காட்டினுர். எதிர் செய்யத் திற னிருந்தும், அமைதி யுடன் எதிர் செய்யாது, பொறுமையாய் மக்கள் தம் தகுதி யைக் காட்டுவதே இந்த இயக்கங்களின் முடி பொரு ளாகும். இந்த இயக்கங்களின் மூலம், தம்மை ஒறுத்தாரி டமும் கண் ணோட்டமும், மன மாருத நண்பும் கொண்டு, தம் பணியைச் செய்யும் பண்பே சாலச் சிறந்த தென்ற கொள்கையை உலகுக்கு அறிவித்தார். அரக்க ரியலும்,, தெய்வ வியலும் போர் புரியும் இவ் வியக்கங்கள் மூலம் காந்தி யடிகள் தம் அன்புடைப் பொறுமையாற் பட்ட

சொல்லொணு இடர்க ளெல்லாம், இவரது உண்மையின் உரனைப் பெருமைப் படுத்தின. மற்றும், இடரால் விளைந்த சோதனையும், வேதனையும், இவரது வாழ்வைப் புடம் வைத்துப் புனித மாக்கின. இந்திய மக்களுக்கு உரிமையான வசதியும், இடமு மீந்து போற்று விடில், ஆங்கிலேயருக்கு உரிமை யாகக் கருதப்படும் எவையும் சித்தி யாகா தென்ற உட் கருத்தை அன்னுருக்குப் புலப்படுத்தி, நல முற வாழும் வண்ணம், அவர்களை இந்தியாவை விட் டேகும் படியான கருத்தை ஒளிப்பு மறைப்பின்றி வெளியிட்டார். இஃதோடு இவர் கருத்து நின்று விட வில்லை. இந்திய மக்களையும் ஒற்றுமை உணர்வால் ஆன்ம விடுதலைக்கும் பாடு படும் படி வற்புறுத்தி அவ்வாறு செய்வதினுல் நாட்டின் விடுதலை தானே வந் தெய்தும் உண்மையினையும் புலப் படுத்தினுர்.

மற்றும், கட லன்னை கருணையுடன் அளிக்கும் அமிழ்தை(உப்பு) யாவரும் பொதுவாய்த் துய்க்க வேண்டுமென் பதூஉம், அவ்வாறு மக்கள் பலருக்கும் பொது வெனப் பாராட்டும் நலங்களின் மேலது, தாம் கர்ணும் இந்திய அருளாட்சி அமைப்பு முறை யென்றும், இவ்வாறு தோன்றிய உயிர் நேய ஒருமைப் பாட் டுரிமை உணர்வில், அரசு, குடி, மேலோர், கீழோர் என்ற வேறு பாடுகள் இலதாகு மென்றும் உலகினர்க்கு எடுத்துக் காட்டவும், மற்றும், இஃதே உலக வாழ்வின் குறிக்கோ ளென்றும் நிலை நாட்டவே தண்டிக் கடற் கரைக்குச் சுக்கில ஆண்டு, மாசித் திங்கள், இருபத்தொன்பதாம் நாளன்று சென்று (12—3—1930) உப்பு வரிச் சட்டம், மனச் சான்று ஒன்றுக்கே கட்டுப் பட்ட உணர் வுடைய மாந்தருக்கு புறம் பாய தென்று கூறி, அந்தச் சட்டத்தையும் மீறி, உள்ள உண்மை ஒளிர, கண்டித்தார், இத் தகைய வாறு அறப் போரிலும் அறப் பயன் உறுதி காண்பார் அரு ளுடைய சுதந்திரச் செல்வர் என்ற உண்மையினை இர்வினேடு கொண்ட நட் புரிமைச் சூளுறவின் மூலம் உலகுக்கு எடுத்துக் காட்டினுர்.

(தொடரும்.)

இன்பப் பா.

வித்துவான் திரு. மு. சடகோபராமாநுசம் பிள்ளை

(முற்றொடர்ச்சி துணர் 23, மலர் 8, பக்கம் 230.)

உ. நாவினால் நவிற்றி யின்ப மெய்தினேன்
மேவி னேனவன் பொன்னடி மெய்ம்மையே
தேவுமற் றறியேன் குருகூர் நம்பி
பாவி னின்னிசை பாடித் திரிவனே.

முன், கண்ணி நுண், சிறுத்தாம்பில், குருகூர் நம்பி யென்ற அளவானே தித்திக்கு மென்றவர், இப்பாவில், தான் அனுபவித்து அடைந்த நன்மையைப் புலப்படுத்துகிறார்.

'யான் என் நாவைக் கொண்டு, மன முதலியவற்றிற்கு எட்டாத இறைவனிடத் தன்பு கொண்டு துதி பாடுவதை விட்டு, எனக்கு நேராகக் காட்சி யளித்துக், கண்கண்ட தெய்வமாய் விளங்கும் ஆழ்வாரைத் துதிப்பதி லீடுபட்டு, மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்; என் தலை படைத்த பயன் அடையும்படித், தலையை ஆழ்வார் திருவடிகளில் தாழ்த்தினேன்; இஃது உண்மை' என்கின்றார். உள்ளம், உரை, செயல் உள்ள இம் மூன்றையும், என்று தன் னாசான் வழிபட்டாற் போலத் தானும் எண்ணம், சொல், செயல் என்ற மூன்றாலும் வழிபட்ட முறையை இப் பாவில் வலியுறுத்துகிறார்.

நாவினால் நவிற்றி யின்ப மெய்தினேன்: இதில், நாவின் பயன் நவிலப்படுகின்றது. இறையை வாயார வாழ்த்தற்கும், நன்மை, தீமை நாடி, நல்லன கொண்டு, அல்லன தள்ளி, ஆவன சொல்வதற்கும், நா சிறந்த கருவி யாதலின், அதன் திறம் முற்படப் பேசப்படுகின்றது. நாவைக் காத்து, நல் வழியில் பயன் படுத்த வேண்டுவது நம் கடமை யாம். நா வாகிய சிறந்த கருவியை இறை நமக் களித்ததன் நோக்கம், நன்மை

தாத் தக்க பல செய்தியை நம்மவர்க் கெடுத்துரைக்கவும், தன்னை நாவாரத் துதிப்பதற்குமே யாம் என்பது புலனும். அல் வழிப்பட்டு, அல்லல் உறுவதற் கன்று. 'வாலுகம் கிடந்த சோலை கிடப்ப, வெள்ளிடை வெய்யிலில் புள்ளி வெயர் பொடிப்ப, அடி பெயர்த்திட்டு நெடிது வருந்துதல் நிழல் தீங் கன்றே.' நாவை நல்வழிப் படுத்தாது, அல்வழிப் படுத்தி அல்ல லுறும் மாக்கள் பலர். ஆதலா னன்றே, செந்நாப் போதார் 'யாகாவா ராயினு நாகாக்க காவாக்கால், சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு' என்றார். நா வடக்கம், நன்மை பயக்கும் செயல் பலவற்றுள் தலைசிறந்தது. பேசப் போகிறாயா? சாகப் போகிறாயா? என்பது பழமொழி. பேசும் போது இனியவற்றை ஏற்போர் வகை யறிந்து பேச வேண்டும். நம் சிறியதிருவடிக்குச், சொல்லின் செல்வன் என்ற பெய ருண்மையும் காண்க. இவற்றிற் கெல்லாம் ஏற்ப, தன் நாவை யடக்கி, நல்வழிப் படுத்திய நம் மதுரகவி திரு நாவீறுடைய பிரானின் தெய்வத் திறம் பேசுகிறார். நாவினால் நவிற்றியது காரணமாக இன்பம் எய்தினேன் என்பது; நீவிரும் அவன் பேரோதும் பேறு பெற்றால் அவ்வின்பத்தை யெய்தலாம் என்பது குறிப்புப் பொருள். சில் வாழ் நாள் பல் பிணிச் சிற்றறி வுடையோரான் எய்தற் கரிய இன்பம். அஃ தாகிறது. பேரின்பம். நிரதிசய இன்பம், ஈறி லின்பம்.

அவன் பொன்னடி மேவினேன் மெய்ம்மையே என்பவற் றால், தன் ஆசானுக்குத் தான் அடிமைப் பட்ட நிலையை உறுதிப்படுத்துகிறார். 'தமர்களில் தலைவ ராய சாதி அந்த ணர்க'ளென்று சொல்லித் திரியும் மரபில் வந்த நம் மதுரகவி, வேளாண் மரபில் வந்த நம் மாறனார்க்கு அடிமைப்பட்டு, வழிபடு கடவுளாகக் கொண்டார் என்றால், அக் கால நிலைக்கு இச் செயல் எவ்வள வுயர்வாகக் கருதத்தக்கது. இக் காலம் கட்சி களால் சாதி வேறுபாட்டை ஒழிக்கக் கருதுகிறார்கள். அக் காலத்துச், சமயத்தால் சாதி வேறுபாட்டை ஒழித்துக் கட்டி வந்தனர். இச் செயல் நம் மதுரகவி, நம் மாழ்வார் திறத்தி லும், மாறனேர் நம்பி, நல்லான் சக்கரவர்த்தி தொடக்க மானோர் திறத்திலும் அறியலாம். நல்லான் சக்கரவர்த்தி ஒரு வைணவர்க்குப் பிரமமேதம் செய்ய, அதனைப் பொறாத அந்த ணர்கள் அவரை வெறுத் தொதுக்க, அச் செயலுக்குக் கவன் றிருந்த ஒருநா ளிரவில், நல்லான் சக்கரவர்த்தி கனவில் இறை வன் தோன்றி, 'நீ ஊருக்குப் பொல்லான், எனக்கு நல்லான்

என்று சாதித் தருளினர் என்பது வரலாறு. ஆக, இறைவ னுக்குப் பழந் தமிழ்க் குடிப் பெருமகனு ரான திருக்குலத் தடி யார்க்குச் செய்த தொண்டில் எவ்வளவு உவப் பென்பது புலப் படும். இத் தகைய நிகழ்ச்சிகளை அறிந்து வைத்தும், இவ் வந்தணர்கட்கு ஏனே இப்படி இறைவனும் ஏற்றுக் கொள் ளாத பிடிவாதம்? இச் சாதிப் பூசலை ஒழிக்க முற்பட்டுச், சீர்திருத்த முறையைக் கையாண்டவர்களுள் நம் எம்பெரு மானர் தலைசிறந்தவர். அக்காலத்து எத்துணையோ எதிர்ப்புக் கிடையே இச் சேவையைச் செய்ய முற்பட்டதால் தான், 'சாதிச் சழக்கை ஒழித்த இராமாநுசர்' என்று பின்புள்ளா ரும் பேச நின்றுர்.

அக் காலத்துச் சமய நூலார், வெறும் சாதி யுயர்வைச் சிறு தூசாக நினைத்தனர். சாதிப் பற்று, சமயத்தையும், கடவுட் பற்றையும் அறுக்க வல்ல ஆயுத மென்று அதனை யொதுக்கித் தள்ளினர். கீழ் வருவனவற்றுல் அவற்றை யறிய லாம். 'சாதியால் ஒழுக்கத்தால் தக்கோ ரேனும், சதுர்மறை யால் வேள்வியால் மிக்கோரேனும்.....பொன்னரங்கம் போற்ரு தார் புலையர்தாம்', 'பழுதிலா வொழுகலாற்றுப் பலசதுப் பேதி மார்கள், இழிகுலத் தவர்க ளேனும் எம்மடி யார்க ளாகில், தொழுமினீர் கொடுமின் கொள்மின்,' 'நின்ஞேடு மொக்க, வழிபட அருளினுய் போல்,' 'ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும் அவர்கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே' என முன்புள்ளாரும், 'மிலேச்சனும் பக்தனுனல் சதுர்வேதிகள் அநுவர்த்திக்க அறிவு கொடுத்துக் குலதைவத்தோடு ஒக்கப் பூஜை கொண்டு பாவந தீர்த்த ப்ரஸாதனு, மென்கிற திருமுகப் படியும்' எனப் பின்புள்ளாரும் மாறன் மன (ஆசார்ய ஹிரு தய)த்தில் கூறியமையும் நோக்கத்தக்கன.

சில போலிகள், 'ஆழ்வார் தாழ்ந்த மரபில் பிறந்தவ ராத லால், அர்ச்சாவதாரத்தில் வணங்கத் தக்கவரே யொழிய, விபவத்தில் வணங்கத் தக்கவ ரன்று. அஃதெப்படி எனின், தாய் மகனுல் வழிபடுதற் குரியவ ளாயினும், வீட்டு விலக்கின் பொழுது எப்படி வணங்கத் தகாதவ ளாகின்ருளோ, அப் படியே இவரும் வணங்கத் தகாதவ ராகின்ருர்' என்கிருர் கள். இப்போலிகளின் மிடற்றைப் பிடித்து நெரித்தது போலத் தான், அந்தணரா யிருந்துவைத்தும், ஆழ்வார்க்கு விபவ நிலையில் எல்லா வகையான அலுவல்களையும் செய்தேன்

காண் என்று சத்தியம் செய்து கொடுக்குமாப்போலே, 'மெய்ம்மையே' என்கிறார். திருமாலின் கோயிலி லுள்ள திருமால் திருவடி நிலைக்குச் சடாரி, சடகோபம் என்ற பெயர்கள் எப்படி அமைந்தனவோ, அங்ஙனமே, நம்மாழ்வார் கோயிலி லுள்ள அவர் திருவடி நிலைக்கு மதுரகவிகள் என்றமையும் காண்க. இங்ஙனம் நம்மாழ்வார் திருவடிக்கே மதுரகவிகள் என்று பெயரிட்டு அழைத்தனர் நம் முன்னோர்கள் என்றால், அவர்கள் இருவர்க்கு முற்ற நிலை எவ்வளவு உயர்வு என்பது தெளியலாம்.

தேவுமற்றறியேன்—இதில், மனத்தின் செயலை மாண்புறக் கூறுகிறார். நம்மாழ்வாரை யன்றி, அவ ரருளிச்செயலை யன்றி, தன் மரபுக் குரிய மாலை வழிபாட்டின் மந்திரத்தையும் தன் நா கூறாது என்கிறார் மாறனார். 'என்நாவி லின்கவி யானொருவர்க்குங் கொடுக்கிலேன்' என இறைவன் துதியையே தன் நாவிற்குப் பயனாகவும், 'அடியடைந் துள்ளந் தேறி, யீறிலின்பத் திரு வெள்ளம் யான் மூழ்கினேன்' என அவன் திருவடியே பேரின்ப மாகவும், 'கோலமா மென் சென்னிக்குன் கமல மன்ன குரை கழலே' எனத் திருவடிச் சேவையைத் தன் தலை யடைந்த பயனாகவும், 'கண்ண னல்லால் தெய்வ மில்லை' என அவனையே தெய்வமாகவும் எண்ணியிருப்பர். இத்தகைய பற்றுக ளெல்லாம் 'தேவு மற்றறியேன்' என்று மதுரகவி கூறிய வற்றி லடங்கும்.

இனிப், பாவி னின்னிசை பாடித் திரிவனே — என்பதை நோக்குவோம். 'திரிவன்; எப்படித் திரிவன்? பாடித் திரிவன். இசை யோடு இயைத்துப் பாடித் திரிவன்.' இன்னிசையில் இயைத்துப் பாடித் திரிவன்' எனப் பல் வகையாலும் பிரித்துப் பொருள் கொள்ளலாம். இசை – இதனைச் செவி மடுத்த பெயர்பொருள், அல்பொருள் எல்லாம் அதனோடிசைந்து நிற்கின்ற என்பது கருதியே, அதனை இசை யென்றனர். முல்லை யந் தீங் குழலில் கண்ண னூதிய மூறுகிய இசையைக் கேட்ட பட்ட மரம் தளிர்த்தது. பசுவும், பறவையும் தம்மை மறந்தன. கருங்கல்லையும் உருகச் செய்வ திசை, கற்புடைப் பெண்டீர் கணவனை யிழந்து கலங்கி அழும் பொழுது, எதுகை, மோனையோடு கலந்து எழில் பெற வருவ திசை. ஊரும் மதலையை உறங்க வைப்ப திசை. ஆற்றில் படகை அழைத்துச் செல்வ திசை. பட்டி மாட்டைப்

பால் கறக்க வைப்ப திசை, பன்னி யுரைப்பானேன்? பல்வகை யானும் மக்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சி யளிப்ப திசை யென்றால், அது மிகை யன்று. இங்ஙனம் சிறப்பு வாய்ந்த இதன் உயர்வு கருதியே, முன்னவர் முத் தமிழுள் இசையை நடுவணமைத்தார். செல்வப் பொருள் அறத்திற்கும், இன்பத்திற்கும் காரணமாய் நடு நின்றாங்கு, இசையும், இயலுக்கும், நாடகத்திற்கும் காரணமாய் நடுவாய் நின்றது. கம்பர் பெருமானும்,'கவிப்பா வமுதம் இசையின் கறியொடு கண்ணனுண்ணக், குவிப்பான்' என்று நம்மாழ்வாரைச் சிறப்பித்தமை காண்க. சோற்றுக்குக் கறி போலப், பாவுக்கு இசை மிகவும் இன்றியமையாதது. இதனால், கம்பர் காலத்துத், திருவாய் மொழியை நல்ல இசையில் பாடி வந்தார்கள் என்பது புலனும். சைவத் திரு முறைக்குப் பண் இருப்பது போலத், திருவாய் மொழிக்கு மட்டுந்தான் அக் காலத்துப் பண்ணுண்டு. இத் தகைய சிறப்புடன் பாடப்பெற்று வந்த திருவாய்மொழி, இன்று கோயிலில் பாடப் பெறும் முறையில் தன் இயற்கை நலனை இழந்து விட்டது. எல்லாவற்றையும் பொறுக்கும் இறைவன், தன் பொறுமையால் தான் கோயிலை விட்டு வெளியேறு திருக்கிறான் போலும். இடைப்பட்ட காலத்து, மக்கள் இசையில் வெறுப்புக் காட்டினார்கள். சமண சமயக் கொள்கையும் இதற்குத் துணை புரிந்தது. இசையில் எண்ணம் சென்றால், பொருளில் புலன் செல்லா தென்று நினைத்தனர் போலும். கேட்டாரை விரைவில் தன் வயப்படுத்தும் ஆற்ற லுடைமை கருதியே, இவ் விசைக் கலையை மோகன வித்தை யென் றழைத்தனர் பெரியோர்.

இனி, இங்கு, இசையை இறுதியில் கூறியதற்கு இரசமாக நஞ்சீயர் அருளிச் செய்யும் படி:

'குருகூர் நம்பி பாவைப் பாடித் திரிவன்' என்னாமல், 'பாவின் இன்னிசை பாடித் திரிவன்' என்றது, ஐச்வர்யத்தை அல்பாஸ்திர மென்று கழித்து, ஸ்திரமான ஆப்த ப்ராப்தியை அபுருஷார்த்த மென்று கழித்து, ஸ்திரமுமாய்ப் பரம போக்யமுமான பகவத் ப்ராப்தியை ப்ராப்யத்தில் ப்ரதமாவதி யென்று கழித்து, இதில் சரமாவதியான ஆழ்வாரையும் உத்தேச்ய ரென்று கழித்து, அவரோடு சம்பந்தித்த விஷயத்தையும் ரசாச்ரய மென்று கழித்து, அத்தோடு சம்பந்தித்த இசையே தமக்கு உத்தேச்சிய மென்கிறார். 'தெய்வத் தண்ணந்

துழாய்த் தாராயினுந், தழை யாயினும், தண் கொம்ப தாயினும் கீழ் வேராயினும் நின்ற மண்ணாயினுங் கொண்டு வீசுமினே' இத்யாதியிற் படியே பகவத் ஸம்பந்தம் கழியக் கழிய நிறம் பெறுகிறபடி' என்றார். தன் ஆசான் அருளிய திருவாய் மொழியைப் பாடவே தான் தனக்கு உடல் வலிவு உண்டாகி எல்லாவற்றையும் செய்யும் ஆற்றலுண்டாகிறது என்பார் 'பாடித் திரிவன்' என்கிறார். 'ரஸாயன சேவை பண்ணித் திரிவாரைப் போலே; இது காணும் இவர்க்குத் தாரகமாய் இவரை ஸஞ்சரிக்கப் பண்ணுகிறது' என்றார் உரை யாசிரியர்.

இவரை இங்ஙனம் ஆழ்வார் பாடலி லீடுபடுத்தி, இசை யொடும் பாடித் திரியும்படிச் செய்தது, 'கோதில் வண்புகழ்க் கண்ண னடிமேல் வண்குருகூர்ச்சட கோபன் சொன்ன, தீதி லந்தாதி யோராயிரத்து ளிவையுமோர் பத்து இசை யொடும் பாட வல்லார் யாது மோர், தீதில ராகி இங்குமங்கும் எல்லாம் அமைவர் தாமே' என்று கூறிய இப்பாட்டே யாம். இப் பாடலில் 'இசையொடும் பாடவல்லார் இங்குமங்கும் எல்லாம் அமை,வர்' என்ற இவ்வரி இவர்க்குப் பலகால் நினை விற்கு வந்திருத்தல் வேண்டும்.'

நம்பி–'நம்பும் மேவும் நசையா கும்மே' என்பது நூற்பா. நம்பி – குண பூரண னென்பர், பெரியவாச்சான் பிள்ளை.

ச. நன்மை யால் மிக்க நான்மறை யாளர்கள்
புன்மை யாகக் கருதுவ ராதலின்
அன்னை யாயத்த னுயென்னை யாண்டிடுந்
தன்மை யான்சட கோபனென் நம்பியே.

நன்மையான் மிக்க நான் மறை யாளர்கள், புன்மையன் என்று கருதி, என்னை இகழ்ந்து, கைவிட்டனர். அவர்கள் இகழ்ந்து விட்ட அச் செயலையே ஏதுவாகக் கொண்டு, என்னைத் தா யாய், தந்தையாய் ஆண்டவன் சடகோபன். அவன் என் நம்பி. இது இப் பாவின் கருத்து.

இப் பாவில், மதுரகவி, தன் னிலையையும், தனக்கு ஆழ் வார் செய்த பே ருதவியையும் மிகுத்துக் கூறுகிறார். பொது

வாக, மக்களிடத்து நன்மை, தீமை இரண்டும் கலந்து கிடக்கின்றன. அவற்றுள் எது மிக்கு இருக்கின்றதோ, அதனைக் கொண்டு மக்கள் நிலையை முடிவு கட்டுவது மரபு. வள்ளுவப் பெருந்தகையார்க்கும் இதுவே கருத்தாதல் 'குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள், மிகைநாடி மிக்க கொளல்' என்ற பாவால் அறியலாம். இங்கு, மதுரகவியார், 'என்னிடத்துக் குற்றமே மிகுத்துக் கிடந்தன. அங்ஙனம் குற்றம் நிறைந்த என்னை யாண்டார்' என்றார். அவற்றுட் சில: குற்றமே கூடு பூரித்திருந்தாலும், அதனையே நற்றமாகக் கொள்ளுந் தகுதியார் என்பார், 'நன்மையால் மிக்க நான்மறையாளர்கள்' என்றார். 'அத் தகையவர்க்கும் யான் ஏற்றுக்கொள்ளப் படாதவனாய்ப்' புன்மையனாயினேன். நான்மறையாளர்களாலும் கைவிடப்பட்ட தன்னை, அவர்கள் கைவிட்டதுவே ஏதுவாகத் ஆட்கொண்ட நஞ் சடகோபரைக் கொண்டாடுகிறார் என்றார்கள், பேருரை கண்ட பெரியார்கள். இங்கு யாம் எண்ண வேண்டுவதும் ஒன்றுண்டு. நன்மையால் மிக்க நான்மறை யாளர்கள் கைவிட்டதற்குத் தங்கள் மரபினரை மதுரகவிகள் கைவிட்டனரோ என்று நினைத்து இவ்வுரையை மிகவும் சமத்காரமாக உரை கண்டனர். இதன் திறம் விரிப்பிற் பெருகும். திருநாளைப்போவாரைத் தீக்குளிக்கச் சொன்னவர்கள் பாண் பெருமாள் பண்பாடு அறியாதவர்கள், மதுரகவியையா விடுவார்கள்? மதுரகவிகள், வேளாண் மாந்தர்க்கு அடிமைப் பட்டு, எல்லா வகையான அலுவலையும் பார்த்து வந்தார். அதனைத் தெரிந்த சில போலிப் பேர்வழிகள், சிறிது கலாம் விளைத்து, வெறுத் தொதுக்கின ராதல் வேண்டும். நம் மதுரகவி, தம் திருவுள்ளத்து அதனை யுணர்ந்தே, குறிப்பாக வெளியிடுகிறார், 'நன்மையால் மிக்க நான் மறையாளர்கள், புன்மையாகக் கருதுவர்' என்று. மிக்க நஞ்சைத் தாத்தக்க அரவினை நல்ல பாம் பென்பது நம் மரபு. அதுவே போன்றது, நன்மையால் மிக்க நான் மறையாளர் என்றதும்.

இப் பாடலில், புன்மையன் என்று தன்னைக் கூறிக் கொண்டார். அடுத்த பாட்டில், அப் புன்மை யாவது இன்னது என்பதை, 'நம்பினேன் பிறர் நன் பொருள் தன்னையும், நம்பினேன் மடவாரையும் முன்பெலாம்' என்றதால் வெளியிடுகிறார். அதனைச் சிறிது ஆய்வாம். ஒருவர் வரலாற்றை அகச் சான்று, புறச் சான்று என்ற இரண்டாலும் ஆராய்வதே மரபு. அம் முறையில் இவர் தாமே தம்

நூலில் 'நம்பினேன்' என்றது தொடக்கமாகக் கூறுவன வற்றால் இவர் புன்மை புலனும். நடந்த நிகழ்ச்சியை ஒளிக்கா துரைப்பதே ஒளி யுள்ளார் செயல். அதுவே உயர்ந்தார் விருப்பமும் கூட. தன் வாழ்க்கையின் நிகழ்ச்சிகளை ஒளியாமல் உரைத்த பெரியார்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். வாழ்க்கையின் நிகழ்ச்சியை ஒளியாமல் உரைத்து உயிர் துறந்த பெரியார் காந்தி யடிகளை எடுத்துக் காட்டாகக் கூறலாம். பொதுவாக இவர் மறைவாகச் செய்த செயலோ, சொன்ன சொல்லோ இன் றென்று கூறிவிடலாம். அதுவே இவர் புகழ் பரவுதற்குக் காரண மாயிற்று என்றால் அது மிகை யன்று. இம் முறையைத் தம் வாழ்க்கை வரலாற்றில் எடுத்துக் காட்டு கின்றார் மதுரகவிப் பெருமாள். 'பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற, செய்யாமை செய்யாமை நன்று' என்பது பொதுமறை யன்றோ? அதனைக் கடைப்பிடித் தனர் போலும்.

கருதுவர்-காலவழு. இறந்த கால மாயிற்று.

'வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும், ஓராங்கு வருஉம் வினைச்சொற் கிளவி, இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல், விரைந்த பொருள என்மனார் புலவர்' என்ற நூற் பாவால் வழுவமைதி யாக்குக. ஆதலின்—இச் சொல் ஐந்தாம் வேற்றுமை ஏதுப் பொருளில் வந்தது. நான் மறையாளர்களாகிய அனைவரும் கைவிட்டமை ஆழ்வார் ஏற்றுக் கொள்வதற்கு ஏது வாயிற்று.

இனி, நம்மாழ்வாரின் அருளின் திறத்தை விளக்க வேண்டி, நம்மாழ்வார் திருவுள்ளமாகக் கூறுவார் கூற்றும் ஒரு வகையில் ஒப்ப முடிந்ததே. அவை, 'இனி, இம் மதுர கவிக்கு நா மல்லது ரக்ஷக ரில்லை' என்று தன்னுடைய க்ருபா மாத்ர ப்ரஸங் நாச்சார்யத் வத்தை வெளியிட்டுக் கொண்டு என்னை ஆண்டா ரென்கிறார். நான் வேறு போக்கடி யற்று 'ஆழ்வார் திருவடிகளே சரணம்' என்று அடைக் கலம் புகுந்த பின்பு, ஆழ்வா ரென்னை யாண்டருளினா ராகில், அதற்கு நான் அவ்வளவாக உருக மாட்டேன்; என்னுடைய இசைவு இல்லாதிருக்கவும், தாமே என்னுடைய புகல லுறுதியைப் பார்த்துக் கைக்கொண்டருளின க்ருபாதிசயம் என்னை உருக்காநின்றது' என்றார்.

அன்னையாய் அத்தனாய்—தம்மை ஆழ்வார் ஆண்ட தன்மைக்கு அன்னையையும், அத்தனையும் ஒப்பிடுகின்றார். இதில், முன்னர் அன்னையைக் கண்டு, பின்னர் அப்பன்மேற் செல்வாம். 'ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே' என்ற படி, ஈன்று காக்கும் சிறப்பு நோக்கி, 'அன்னையாய்' என்றார். இதனையே நம் சமயப் பெரியார்கள், 'தாயினு மன்பன்', 'தாயினு மாயின செய்யும்', 'தாயினும் சாலப் பரிந்து' என்றுங் கூறுவா ராயினர். பிற் காலப் புலவர், இன்னொரு படி கூடச் சென்று, நாட்டையும் சேர்த்துப், 'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும், நற்றவ வானினும் நனிசிறந் தனவே' என்றார். ஒன்றற்கு ஒப்புக் கூறுங்கால், உவமேயத்தை விட உவமானம் உயர்வாக இருத்தல் வேண்டுமென்பது

'உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங் காலை'

என்ற தொல்காப்பிய உவம வியற் சூத்திரத்தால் விளங்கும். இந் நிலையில் உவமை காண வந்த பெரியார் எல்லாரும் ஒரு மிடறாகத் தாயை ஒப்புக் கண்டனர். கண் கண்ட முன்னறி கடவுளாய்த், தன் னுணவையும் குறைத்துக் காத்த தாய்க்கு வேறெதனை உவமை கூறுவது. இங்குப் பழைய வரலா றொன்று நினைவிற்கு வருகின்றது? மா அலக்சாந்தர் இந்தியாவின் மீது காதல் கொண்டான். படை திரண்டுபோர்க் கெழுந்தன. அரியணை யேறு தாசாளும் வண்ணம், அமைச் சனிடம் நாட்டை ஒப்பித்துப், போர்க் கோலங் கொண்டு, புன்னகை தவழ, நன்னய மறவருடன், நாள் பல கடந்து, நம் நாடடைந்து, ஒற்றுமை யின்றிச் சிதறுண்டு கிடந்த நாட்டின் ஒரு கோடியில் வெற்றி கண்டு. தன் கொடி நிறுவி, தரணி பாளச் சில காலந் தங்கினன். இக்காலத்துத், தன் நாட்டில், அமைச்சனுக்கும் தன் தாய்க்கும் மன வேறுபா டுண்டா யிற்று. அதனை அமைச்சன் அரசனுக் கறிவித்தான். திரு முகத்தைக் கண்டான் அலக்சாந்தர். தாயின் அருமை சே யறியாதா? அறியும். மன்னன் மறு மாற்றம் என்ன? 'நீ எழுதிய கடிதப்படி அனைத்தும் உண்மை யாயினும், என் தாயின் கண்ணிலிருந்து வரும் ஒரு துளி நீர்க் கிணை யாகாது' என்றான். என்னே; தாயின் பா லன்பு. 'ஈன்றாள் பசி காண்பாயினும்' எனப் பெரியார், மற்றையார் பசியினும் தாயின் பசிக்கு எவ்வளவு உயர்வு கொடுக்கிறார் பாருங்கள். இவற்றை யெல்லாம் அடக்கி யல்லவா, அன்னையாய் என்றார்

மதுரகவி. அத்தனுய்—தந்தையாய் என்றபடி. தாயின் அலுவல் ஈன்று புறந்தருதல் 'சான்ருே ஞக்குதல் தந்தைக்குக் கடன்' என்றபடி தந்தை அலுவல் சான்ருே ஞக்குதல் அன்ருே. தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை யல்லவா? ஆதலால், தாய்க் கடுத்த இடம் பெறத் தக்கவர் தந்தை தானே என்பது 'அத்தனுய்' என்றதா லறியலாம்.

இனி, 'இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்' என்ருங்கு, ஆழ்வாரின் பண்பாட்டைப் புலப்படுத்துவாராய் 'தன்மையன் சடகோபன்' என்கிருர். வளி யுளறுந் தன்மைத்து, நீர் குளிரும் தன்மைத்து என்பன போல, ஆழ்வார்க்கு ஆண்டிடுந் தன்மை இயற்கைத்து என்பார், 'தன்மையன்' என்ருர்.

இங்கு இன்னுென்று சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிருேம். அது: 'தேவு மற்றறியேன்' 'அன்னையாய்.... என்னை யாண்டிடும் தன்மையன் சடகோபன்' என்பன முதலாகப் பத்துப் பாக்களால் நம்மாழ்வாரையே எல்லாமாகக் கொண்டாடுகிருர். ஆம். ஆண்டருளும் ஆண்டவனை விட்டு, ஆழ்வாரைக் கொண்டாடுதல் ஏன்? என்னில், வழிபாட்டு முறையை வைணவர்கள் இரு வகைப் படுத்தினர். ஒன்று, நேரே இறைவனை வழிபடுதல்; ஒன்று அவ னடி யடைந்த அன்பரை வழிபடுதல். இவ் விரண்டு வகையில், இங்கு மதுரகவி அவ னடி யடைந் துயர்ந்த ஆழ்வாரை வழிபட்டனர். திருமாலை விட்டு அவ னடி யடைந்தவரை ஆசானுக் கொண்டு வழிபடுதலே சாலச் சிறந்ததெனக் கொண்டனர் மதுரகவி. எடுத்துக்காட்டாக, ஆழ்வார் பாசுரத்தினின் றென்றைக் காட்டலாம். அது 'அஞ்சிறைய மடநாராய்' என்று தொடங்கும் பாட்டு. அதில், பொதுவாக ஆழ்வார் அகப்பொருள் துறையில் வைத்துத், தாம் தலைவி நிலையிலிருந்து, நாரையைத் தூது விட்டதாகக் கொண்டாலும், இப் பாவிற்கு உடனிலைச் சிலேடை (சுவாபதேசம்) வகையில், ஆழ்வார் அடியவ ராகவும், நாரை ஆசானுகவும், திருமால் தலைவராகவும் கொண்டு, ஆசான் வாயிலாகத் தம் விருப்பத்தைத் கூறித், தாம் செய்தன பொறுத்து, ஆட்கொள்ள வேண்டு மென்று வேண்டித், திருமாலிடத்துத் தூது விட்டதாகவும் கொண்டனர். யானையின் மேல் ஏறப் புக்கார், தாமாக ஏற எண்ணின், இன்ன லுறுவர், விர

கறிந்த பாகன் துணை கொண்டு ஏறினால், அது முறை யாம், அப்படியே யாயிற்று, இறை வழிபாடும். இக் கொள்கை உடையவர் காலத்து மிக்க வலியுறுத்தப்பெற்று, எழுபத்து நால்வரைச் சிம்மாசனாதிபதி (ஆசாரிய புருஷர்) ஆக நியமித்தனர். 'எதிராசர் தாளில் சிங்காதனராய் வரும் ஆரியர்கள் எழுபத்து நால்வர் என் வான் றுணையே' என்பதுங் காண்க.

கண்டுகொண் டென்னைக் காரிமா றப்பிரான்
பண்டை வல்வினை பாற்றி யருளினான்
எண்டி சையு மறிய வியம்புகேன்
ஒண்ட மிழ்ச்சட கோப னருளையே.

முன் பாவில்,தன் புக ழேத்த வருளினான் என்றார். அதனை விளக்கி, அப் புக ழேத்துகையை இப் பாவில் வெளியிடுகிறார். ஆழ்வார், திருவாய்மொழி முதலான நூல்களை வெளியிட்டா ரென்றாவது, இறைவனையும் தம் வயப் படுத்த வல்லார் என்றாவது அவர் புகழைப் பேச முற்பட வில்லை. பலகால் செய்த தீ வினையால் வந்த பாவங்கள் கூடு பூரித்துக் கிடந்த அடியேனையும் மிகத் தூய்மை யுடைய னாக்கி யாட்கொண்ட, யாதொரு தடங் கருணை யுண்டோ, அதன் திறத்தினை நாடறிய யான் கூறுவல் என்கிறார்.

கண்டு—நன்கு ஆராய்ந்து, கொண்டு—ஏற்றுக் கொண்டு. என்றாவது, கண்டு-கடைக்கணித் தருள்செய்து, கொண்டு-என் தீச் செயலே பற்றாசாகக் கொண்டு என்றாவது பொருள் கொள்ளலாம். கண்டு கொண்டு-என்று இவர் கூறுவதற் கடி 'இருந்தான் கண்டு கொண்டு எனது ஏழை நெஞ்சு ஆளும்' என்ற திருக் கடித்தானப் பாசுரத்தில், தம் ஆசான் திருமால் சார்பாக வெளியிட்டு அருளிய முறையைப் பின்பற்றி, இவர் ஆழ்வார் திறத்தில் விளக்கினார்.

காரி மாறப் பிரான்: காரி—ஆழ்வார்க்குத் திருத் தந்தையார். இவர் பொற்காரியார் எனப் பெயர் பெறுவர். (தாய்-உடைய நங்கை). மாறன்-நம்மாழ்வார். இவர் உலக நெறிக்கு மாறுபட் டிருந்தமையான் எய்திய பெயர். சடத்தைத் தொடரும் வாயுவைக் கோபித்தமையான் சடகோபர் என்ற பெயரும் காண்க.

இங்கு நம்மாழ்வாரைக் குறிப்பிட வந்த மதுர கவியார், நம்மாழ்வார் தமப்பனுரைக் குறித்ததன் காரணம்? சமய நெறியிற் றலை சிறந்து, குன்றிடை விளக்காய், 'வம்மின் புலவீர்! நும் கைசெய்துய்மின்' என்று பணிக்க வல்லுநராய், அறம், பொரு, ளின்பம், வீடு என்ற நான்கையும் அடைதற்குரிய, கருவிருத்தக் குழி நீக்கும் திருவிருத்த முதலிய நான்கு நூல்களையும் வெளியிட்டருளிய பெரியாரை உலகிற் களித்த வள்ளல் நம் பொற்காரியா ரன்றோ? நம்மாழ்வா ராகிய கருவூலத்தை ஈன் றருளியமைக்கு நன்றி பாராட்டுகிருர். மாறனுரைப் பெற்றெடுத்த மா பெருந் தகைமையைக் கொண்டாடுகிருர். நன்றி மறப்பது நன் றன் றென்பது தமிழர்தம் கொள்கை யல்லவா? தமிழர்தம் தவப் பயனுய்த் தோன்றிய நம்மாழ்வாரைச் சார்ந் தொழுகியவ ரன்றோ நம் மதுரகவியார்? இவரும் அத் தகையவரே. 'மகன் தந்தைக் காற்று முதவி யிவன் தந்தை, என்னோற்ருன் கொல் லென்னுஞ் சொல்' என்ற பொது மறைக் கிலக்கானுரைப் போற்றுகிருர்.

பண்டை வல்வினை: பண்டை வல் வினை யாவது எது என்ருல், திருமாலின் அடிமைத் தன்மைக்கு ஒரு வரம்பாக இருப்பது, அவன் தொண்டர்க்குத் தொண்டனுய் இருக்க வேண்டு மென்றவற்றை அறியப் பெருமை. பாகவதர்கட்குத் தொண்டு புரிவதை விலக்கிப், பகவா னளவிலே பண்ணும் பத்தியைப் பாப மென் றன்ரோ நம் முன்னோர் பேசினர். ஆகவே, இறைவ னிடத்துப் பண்ணும் பத்தியைவிட, அடியவரிடத்துப் பண்ணும் பத்தியே சிறந்த தென்ப தாம்.

பாற்றி யருளினுன்: பாற்றுத லாவது – இறைவன் மாட்டன்பு செய்ய ஒட்டாமல் தடுத்து நிற்கும் பார மாய பழவினை பற் றறும்படிச் செய்து, அதனை உரு மாய்ந் தொழியப் பண்ணுதல்.

ஒண் தமிழ்ச் சடகோபன்: சமயத் துறை நின்று, தமிழ் வளர்த்த பெரியார் இவர். 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தன்' என்பதுங் காண்க. இப்பெரியார் கட்குச் சமயமும், தமிழும் ஒன்ருகவே தோன்றின. ஐந்தாம் நூற்ருண்டி லிருந்து பதின்மூன்ரும் நூற்ருண்டு வரை எழுந்த இலக்கியம் மிகப் பல, தமிழோடு தொடர்பு கொண்டு

சமயமும், சமயத்தோடு தொடர்பு கொண்டு தமிழும் வளர்ந்த தென்றால், அது மிகையன்று. இச் செயல் வரலாற்றோடு தொடர்பு கொண்டது. இடைப்பட்ட தொள்ளாயிர மாண்டுகள் தமிழ் மிக வுயர்ந்த நிலையி லிருந்தது. 'கணி கண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி, மணிவண்ணா நீ கிடக்க வேண்டாம்—துணிவுடைய, செந்நாப் புலவனும் போகின்றேன் நீயுமுன், பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்' என்று கடவுளையும் தம் ஏவல் கேட்கும்படிச் செய்த புலவர் வாழ்ந்த காலம்; தொண்டர் நாதனைத் துணையாகக் கொண்ட காலம், எலும்பு பெண் ணுருவாக் கண்ட காலம்; சமயத் துறையில் போட்டி வளர்ந்து, எண் ணற்ற இலக்கியம் எழுந்த காலம், அக் காலம். இதன் திறம் விரிப்பின், மற்றொன்று விரித்த லாம்.

இனி, மதுரகவிகள், தன் ஆசான் உவந்து கூறிய 'பாலேய் தமிழர் இசைகாரர் பத்தர் பரவும் ஆயிரம்', 'பண் தலையில் சொன்ன தமிழாயிரம்', 'ஆய்ந்த தமிழ்', 'சட கோபன் ஏத்திய தமிழ்', 'வண்ண ஒண் தமிழ்கள்', 'சொல் நேர்பட்ட தமிழ்', 'தீதிலாத ஒண் தமிழ்கள்', 'பண்ணார் தமிழ்', என்ற இத் தகைய பனுவல்களை ஓதி யுணர்ந்து, பிறர்க் குரைத்து, உள்ளங் குளிர்ந்தவ ராதலால், 'ஒண் தமிழ்ச் சடகோபன்' என்றார். இதில் தமிழ்கள் எனக் 'கள்', விகுதி வருவன எல்லாம் முத்தமிழையும் குறிப்பதாகக் கொள்ளல் அமையும்.

பயனன் றாகிலும் பாங்கல ராகிலும்
செயனன் றாகத் திருத்திப் பணிகொள்வான்
குயினின் றார்பொழில் சூழ்குரு கூர்நம்பி
முயல்கின் றேனுன்றன் மொய்கழற் கன்பையே.

கருத்து: பிறர் திருந்துவதில் தமக் கொரு பய னின் றேனும், அவர்கள் திருந்துவதற்குப் பாங்கில்லார் களேனும், தன் செயலால், நன்றாகத் திருத்திப் பணி கொள்ளும் பொருட் டுக் குருகூரில் எழுந்தருளி யுள்ள நம்பியே! நின் திருவடியில் அன் புண்டாவதைக் குறித்து முயல்கின்றேன்.

'பயன் அன்று......திருத்திப் பணி கொள்வான்' என்ற அடிகள் சுவைத் தின்புறத் தக்கன. முன் பாவில், 'ஆண்டிடும்' என்றதனை வழிமொழிந்து, இவ்வடியில் அதனுக் கொரு விளக்கம் தருகின்றார். ஒன்றுக்கும உதவாத தன்னை ஏற்று, எல்லாவற்றிற்குந் தகுதி யுடையவனாக ஆக்கின தன்மையைக் கொண்டாடுகின்றார். இறைவன், மக்கள் வடிவு கொண்டு, மக்களைத் திருத்தி ஆட் கொள்வதற்கு இவ் வுலகிற்கு வந்தாங்கு, நம்மாழ்வாரும், தன்னைக் கொள்வான், குருகூரில் எழுந்தருளி யுள்ளார் என்கிறார். இங்ஙனமே, ஒவ்வொரு பாவிலும் வெவ்வேறு வகையில் தம் இழிவையும், தம்மாசான் உயர்வையும் புலப்பட மொழியும் திறம் போற்றற் குரியது.

இங்கு, இனி யொன்று: பொதுவாக ஆசானைத் தொடராசான், அருளாசான் என இரண்டு வகைப்படுத்தினர். தொடராசான், மாணவன் தன்னுடன் பல்காலும் தொடர்ந்து தொண்டு புரிந்தால் அருள் செய்வான். இத் தகையவரைத் திருக்கோட்டியூர் நம்பி போன்றாரோடு ஒப்பிடுவர். இவர், உடையவர் ஈரொன்பான் தடவை கோயிலுக்கும், கோட்டியூர்க்கும் எழுந்தருளிய பின்னரே திருமந்திரத்தை வெளியிட்டார். இஃ துண்மை வரலாறு. அருளாசான், மாணவன் தன்னைத் தொடரினும், தொடராவிடினும், அன்றிச் சற்றுத் தீயனு மாக விருப்பினும், காம்பில் பால் சுறந்த கறவை, தன் கன் றுள்ளிச் சென்று பால் கொடுக்கு மா போலே, இன்னும் மாணவர்களைப் பல்காலும் அண்மி, அவனுக்கு ஆவன புரிவதையே தம் பேறாகக் கருதித், திருத்திப் பணி கொள்வான். இத் தகையவர்களை, எம்பெருமானர், பட்டர் முதலாயினோரோடு ஒப்பிட்டனர். இத் தகைய அருளாசானின் ஆசாரிய பூர்த்தியை மதுரகவியார், நம் மாழ்வார் திறத்துத் தன் அனுபவத்தில் கண்டாராதலின், அப் பண்பாட்டி லீடுபட்டுத், 'திருத்திப் பணிகொள்வாள்' என்று பேசுகின்றார். பழுதே பல பகலும் போக்கிக், காலத்தை வீணில் கழிக்கும் உலகரைத் திருத்துவதற் கென்றே திருவவதாரம் செய்த மாறனார், இவ் வணங்கா முடிகளோடு வாதுக்கு நிற்க அஞ்சி, 'ஆரானு மாதானுஞ் செய்ய அகலிடத்தை ஆராய்ந்து அது திருத்தலாவதே' என்று வெறுத்துக், கை வாங்கிய பினனரும், தன் அருட் குணத்தால், உலகர்களை விடாது, 'சொன்னால் விரோதம், ஆயினும் சொல்லுவன்'

என்று, இத் தகைய திருப் பாக்களால் பன்னூறு தடவை உபதேசித்துத் திருத்த முயற்சித்தது, இவரின அருளாசான் தன்மையை நன்கு விளக்கு மன்றோ.'

நம் மாழ்வார் தம் திறத்து உதவிய பே ருதவிக்குக் கைம் மாறு இன் றென்பார், 'அன்பை முயல்கின்றேன்' என்றார். அதுவும், 'அன்பைப் பெற முயற்சிக்கின்றேன்; அன்பும் நிறைந்தில' வென்பது இதன் கருத்து. மக்கட் குதவிய மாரிக்கு மாறுதவி மக்களால் முடியா தன்றோ?

அன்பன் தன்னை யடைந்தவர் கட்கெல்லாம்
அன்பன் தென்குரு கூர்நகர் நம்பிக்கு
அன்ப னாய்மது ரகவி சொன்னசொல்
நம்பு வார்பதி வைகுந்தங் காண்மினே.

இப் பாவில், நம்மாழ்வார் திறத்து மிக்க அன்போடு வெளியிட்ட இக் கண்ணி நுண் சிறுத்தாம்பு என்ற நூலை அன்புடன் ஓத வல்லார், பரமபதத்திற் சென்று, ஆழ்வார் அடிக்கீழ் வாழப் பெறுவர் என்று பயன் சொல்லி நியமிக்கிறார்.

அன்பன் தன்னை யடைந்தவர்கட் கெல்லாம் அன்பன் : இத் தொடர் இருவர்க்கு மாகலாம. இத் தொடரை நம்மாழ்வார்க் காக்கின், 'பயிலுந் திருவுடையார் யவரேனு மவர்கண்டீர்' என்றாங்குச், சாதிச் சழக்கி லீடுபடாமல், இறையிடத் தன்பையே பற்றாசாகக் கொண்டு, அன்பர்கள் எல்லாரிடத் தும் அன்பு கொண்டவர், ஆழ்வார் என்பது புலனும். மதுர கவிகளுக் காக்கின், தம் ஆசா னான ஆழ்வார், அடியவர் எல்லாரிடத்தும் வைத்திருந்த அன்பை மதுரகவி தன் ஆசான் ஒருவ ரளவிலே செலுத்தியமை கருதத் தக்கது. பல கால் வாயில் செல்லும் நீர் ஒரே கால்வாயில் செல்வது சிறப்புடைய தன்றோ? அன்பைப் பகிர்ந்தால், அளவில் குறையு மல்லவா?

வைகுந்தம் காண்மின் : மதுரகவிகளுக்கு நம்மாழ்வாரே நினைப்பானல், ஆழ்வார் திருநகரியை அன்றோ பேசவேண் டும். அதனை விடுத்து, வைகுந்தத்தைப் பதியாகப் பேசுவா னேன்? என்று வினவை யெழுப்பி, அதற்கு விடை கூறும்

சிறப்பு நோக்குக. "திருநகரியில் ஆழ்வா ராணையும், பொலிந்து நின்ற பிரா னுணையும் இரு புரியாய்த்துச் செல்வது; அங்ஙனன்றியே ஆழ்வா ராணையே செல்லும் தேசம் பரமபதமேயிறே; 'அடியார் நிலாகின்ற வைகுந்தம்' என்றும், 'வானவர் நாடு' என்றும் சொல்லக்கடவதிறே" என்றார். இத்தால், ஆழ்வார் ஒருவரே, தனக் குரிமை யாகப், பே ரரசாக ஆளுகிற பரமபதமே ஆழ்வார் அடியார்கட்கு வதியும் நாடாக விதிக்க அமையும் என்பத தாயிற்று.

'வைகுந்த மென்றொரு தனி நாட்டின் சிறப்பைக் கூறிய தன்று; ஆழ்வார் எழுந்தருளி இருக்கு மிட மெதுவோ, அதுதான் வைகுந்த' மென்பர், நம்பி திருவழுதி வளநாடு தாசர். 'ஓராயிரத்துள் இப்பத்தும் உரைக்க வல்லார்க்கு வைகுந்த மாகுந் தம்மூ ரெல்லாம்'; இது ஆழ்வார் திருவாக்கு.

பட்டர் திருவவதாரத்திற்குப் பின்னர், மண் ணுல கென்றும், விண் ணுல கென்றும் ஒரு வாசி யின்றி, இடைச் சுவர் தள்ளி, இரண்டு விபூதியும் ஒரே அனுபவப் பொரு ளாயிற்று என்று நம் பிள்ளை குழாத்தில் பல்காலும் கூறுவ துண்டு என்பர் பெரியோர்.

இங்ஙனம், மதுரகவிப் பெருமாள், தம் இழிவையும், தம்மை யாட்கொண்ட ஆழ்வாரின் உயர்வையும் பலபடியாகப் பேசி, இத் தகைய தாழ்ந்த என்னையும் ஆட்கொண்டார் என்கிறார். இதுவே இந் நூலின் சுருக்கம்.

முன்னோர் மொழி பொருளே யன்றி அவர் மொழியும் பொன்னே போற்போற்றி, அவர்கள் கண்ட முறையையே பின் பற்றினேன். ஓரா தெழுதினே னயினும், ஒண் பொருளை ஆராய்ந்து கொள்க அறிவுடையோர்.

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்

கம்பர் திருநாள்

24—3—48

முத்தமிழ் வள்ளல், இராவ் பகதூர், திருவாளர்

A. Y. அருணாநந்தசாமி நாடார் அவர்களது

தலைமையுரை

தமிழன்பர்களே,

அன்பின் விளைவாக எனக்கு வாசித் தளித்த பாராட்டுரைகளுக்கு என் நன்றி. நான் ஒரு தமிழ்த் தொண்டன் என்ற முறையில் இப் பாராட்டுக்களை ஏற்றுத், தமிழன்னையின் திருவடிகளில் சேர்ப்பிக் கிறேன்.

தம் மொழி ஆங்கில மொழி யென்று சொல்லிக் கொள்வதிலே ஆங்கிலேயர் பெருமை கொள்கி ருர்கள். தம் மொழி பிரஞ்சு மொழி யென்பதிலே பிரஞ்சுக்காரர் பெருமை கொள்கிருர்கள்.

வங்காளிகள் தம் மொழிபற்றிக் கொள்ளும் பெருமையும், அதனை வளர்க்கச் செய்யும் முயற்சி களும் பெரும் அளவின. தெலுங்கரது மொழிப் பற்றும், தம் மொழிபற்றித் தாம் கொள்ளும் பெருமை யும் அளவில. காந்தியடிகளார் தம் தாய் மொழி யாகிய குசராத்தியில் அளவிலாப் பற்றுக் கொண்டிருந் தார்கள். அம் மொழியைச் செம்மை யாக்க அடிக ளார் செய்த தொண்டு பாராட்டத் தக்கது. தம் மொழி இந்துஸ்தானி யென்பதிலே, வட நாட்டார் பெருமை கொள்கிருர்கள். அம் மொழியை, இந் நாட்டு அரசியல் மொழியாக ஆக்கவேண்டு மென் பதிலே, அவர்களுக்கு உள்ள ஆர்வமும், முயற்சியும்

அளவிட முடியாது. தமிழர் நிலையென்ன? தமிழில் பேசக்கூடக் கூச்சப்பட்டார்கள். தமிழில் பேசுவதைக் குறைவான செயலாகக் கருதினுர்கள். தமிழைப் புறக்கணித்தார்கள். விளைவென்ன? தமிழ் அவமதிப்புக் காளாயிற்று. தமிழர் தாழ்ந்தவராகக் கருதப்படுகிறுர்கள்; அலட்சியப்படுத்தப்படுகிறுர்கள்.

இப்பொழுதுதான் தமிழருக்கு விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. தம் இழி நிலையை உணர்ந்து வருகிறுர்கள். தாய்மொழியைப் புறக்கணித்ததின் பயனே, தமது இன்றைய இழி நிலை என்பது அவர்கட்குப் புலனுகி வருகிறது. மறைந்தும் புதைந்துங் கிடந்த தமிழர் வரலாறும், தமிழ்மொழியின் வரலாறும் இப்பொழுது வெளிப்பட்டு வருகின்றன. தமிழ் மொழியின் இனிமை, தொன்மை, வளம் ஆகியவற்றைத் தமிழர் இப்பொழுதுதான் அறியத் தலைப்பட்டிருக்கிறுர்கள். தமிழ் இளைஞர் உலகம் தமிழ்ப் பற்றில், தமிழ்த் தொண்டில், தமிழர் வாழ்வுக் கான பணியில் ஈடுபட்டுவிட்டது. வருங் காலம் தமிழுக்கும், தமிழருக்கும், தமிழ் நாட்டுக்கும் நற்காலம் என்பதில் ஐயமில்லை.'

உலகத்தின் நிலப் பகுதிகளிலே மிகத் தொன்மையானது தமிழ் நாடு. தமிழ் நாடு, ஒரு காலத்தில், ஆஸ்திரேலியா கண்டம் வரை பரந்திருந்தது. தமிழ் நாட்டின் தென் பகுதியைக் கடல் கொண்டது. தொன்மையான நம் தமிழ் நாட்டில்தான் முதன்முதலாக மனிதன் தோன்றினுன். இது மனித வரலாற்றுக்காரர்கள் (Anthropologists) ஆய்ந்து கண்ட முடிபு. இங்கே தோன்றிய மனிதக் கூட்டம், சமிக்கைகளினுலே தங்கள் எண்ணங்களை வெளியிட்டு வந்தனர்; பின்னர், ஒலியினுலே எண்ணங்களைத் தெரிவித்தனர். ஒலியினுலே எண்ணங்களைத் தெரிவிக்கும் முறை பல நூறுயிரம் ஆண்டுகளாக வளர்ச்சி யுற்று, வளம் பெற்று, வரி வடிவம் பெற்று, இலக்கியங் கொண்டு, இலக்கணம் ஆக்கப் பெற்று, இன்றைய தமிழ் மொழி ஆயிற்று. எனவே, தமிழ், உலக மொழிகள் எல்லாவற்றிலும், மிகப் பழைய மொழி—முதன்மொழி.

தமிழரது நாகரிகம் பல நூறுயிரம் ஆண்டுகளாக வளர்ந்து, பண் படுத்தப்பட்டது. அவர்கள், உலகத்தின் நிலப் பகுதிகளி லெல்லாம் குடி யேறியோ, தொடர்பு கொண்டோ, நாகரிகத்தைப் பரப்பினுர்கள் என்பதற்கு ஆதாரங்கள் கிடைக்கின்றன. இந்திய நாடு முழுமையுமே தமிழர் நாடாக இருந்தது என்பதை, மோகஞ்சோதாரோ, ஹாரப்பா முதலிய புதைந்த நகரங்கள் நிலை நாட்டுகின்றன. உருஷியாவின் கீழ்க் கோடியி லுள்ள காமஸ்கட்கா, சீனு, பாரசீகம், எகிப்து, கிரீஸ், இத்தாலி, இஸ்பெயினின் தென் பகுதி, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, பின்லந்து, மத்திய கிழக்கு ஐரோப்பா முதலிய நாடுகளிலும், தெற்கே நியூ சிலாந்திலும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் குடியேறியோ, வேறு வகையான தொடர்பு கொண்டோ, அந்தந்த நாட்டவரால் மதிக்கக் கூடிய நிலையில் வாழ்ந்தார்கள் என்பதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. தமிழரது நாகரீக வளர்ச்சி, பல நாட்டுத் தொடர்பு ஆகியவற்றையொட்டித் தமிழ் மொழியின் சொல் வளமும், பொருள் வளமும் பெருக லாயின. இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பல இலக்கிய இலக்கணமும் கொண்டு விளங்கியது நம் தமிழ் மொழி.

அன்னியர் வருகையினுல், தமிழர் நாகரிக வளர்ச்சிக்கும், தமிழ் மொழி வளர்ச்சிக்கும் தடை ஏற்பட்டது. விஞ்ஞான வளர்ச்சியின் பயனுகை, உலக நாகரிகம் காற்றைக் காட்டிலும் கடிது செல்கின்றது. தமிழர் பின்னணியில் தேங்கி நிற்கின்றனர். தமிழர் உலக மக்களோடு ஒத்த நிலையை அடையவேண்டுமானுல், தமிழ் மொழி வளம் பெற வேண்டும். விஞ்ஞானக் கலைக ளெல்லாம் தமிழிலே மொழி பெயர்க்கப்பட்டு, தமிழர் எல்லாரும், எளிதிலே படித்துப், பயன் பெறுமாறு செய்யவேண்டும். இதுவே இன்று அவசரமாக வேண்டப்படும் தமிழ்த் தொண் டாகும். இதுபற்றி இன்றைய சென்னை மாகாண அரசியலார் செய்துவரும் முயற்சி தமிழர் எல்லோரும் வரவேற்க வேண்டிய தொன் ருகும்.

இனிக், கம்பரைப்பற்றி ஒரு சில சொல்ல எண்ணுகிறேன்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்
யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர் போல் இளங்கோவைப்போல்
யாங்கணுமே கண்டதில்லை x x x"

என்றார் பாரதியார். கம்பரின் கவிச் சுவை, உவமையின் அழகு ஆகியவற்றை, பாரதியார், இன்று இங்கு இப்பொழுது கூறவிருக்கும் அறிஞர்கள் போன்ற பெரும் புலவர்கள் கூறவேண்டுமேயன்றி, என் போன்றார் கூறல் கூடிய தன்று. கம்பர் ஒரு பெரும் தமிழ்ப் புலவர். அவர் தமிழ் மன்னர்களாலும் வள்ளல்களாலும் போற்றப் பட்டார். அவர் தமிழுக்கு உயர்ந்த இலக்கியங்களை ஆக்கித் தந்தார். அவை இராமாயணம், சடகோப ரந்தாதி முதலியன.

அயோத்தி மன்ன ராகிய இராமருடைய வரலாற்றை வான்மீகி முனிவர் வடமொழியில் எழுதினார். அதனை யொட்டிக் கம்பர் தமிழில் எழுதினார். தமிழர் நாகரிகத்துக்கும் வட நாட்டார் நாகரிகத்துக்கும் வேற்றுமை மிக வுண்டு. தமிழர் நாகரிகத்தைக் கொண்டு பண் படுத்தித், தமிழர் ஏற்கும் முறையிலே, இராமருடைய வரலாற்றைச் சித்தரித்தார் கம்பர்.

கம்பர் நம்மாழ்வாரிடத்து அளவிலா அன்பு கொண்டவர். அவரது அன்பு சடகோப ரந்தாதியாக மிளிர்ந்தது. தமிழ் மக்களிற் பலர்க்கு இவ் வரிய இலக்கியம் இருப்பதாகவே தெரியாது.

கலைக்களஞ்சியங்களாகிய இராமாயணத்தையும் சடகோப ரந்தாதியையும் தமிழுக்குத் தந்துதவிய கம்பரது திருநாளைக் கொண்டாடுவது மிக அவசியமானது. இந்தத் திருநாளிலே பங்குகொள்ளுவதற்கு எனக்கு வாய்ப்புத் தந்த இச் சங்கத்தார்க்கு என் நன்றி. வணக்கம்.

பரத சாத்திரம்

முதலாவது
பாவ வியல்

(முற்றொடர்ச்சி துணர் 23, மலர் 9, பக்கம் 282.)

கசஅ-வது. சந்தாங்கிசக் கை.[1]

சந்தாங் கிசக்கை தற்சனி பெருவிரல்
வந்திரு நகநுனி மருவக் கூட்டி
மற்றை மூவிரலும் வானைப் பார்த்தல்
உற்ற கைத்தொழில் உரைக்கக் கேள்நீ
திருவுரு வெழுதுகோல் தீர்க்கமாப் பிடித்தல்
திருநாமஞ் சிந்தூரஞ் சீருடன் குழைத்தல்
கன்னற் சிலைவேள்[2] கணைமலர்[3] தொடுத்தல்
பொன்னுரை யாணி புகழ்ந்து பிடித்தல்
ஊசி பிடித்தே யுட்டமர் செய்தல்[4]
நேச மங்கையர்குருக் கண்ணை நெருடுதல்
மூக்கைச் சிந்துதல் முகைமலர் மோத்தல்
ஆர்க்குமுப் புரிநூ லதனைக் காட்டுதல்
திருஞான முத்திரை திரிகோண முரைத்தல்
பெருமித யோக பிரமாணங் காட்டல்
விரைமலர் தன்னை வியன்றொடை யாக்கல்
உரைவாணி[5] முத்திரை யொப்பிட்டுக் காட்டல்
சிறுநூற் கயிறு சிறப்புடன் றிற்றல்
உறுமனச் சலிப்பிற்புல் லூற்றுக் கிள்ளுதல்
ஆடிய சபாபதி யக்கினி காட்டிடல்
பீடுற வாமெனப் பேசினர் குறுமுனி.

(இ-ள்) சந்தாங்கிசக் கை யென்பது - சுட்டு விரல் பெருவிரல்களின் நக நுனிகளை யொன்றாகச் சேர்த்து

---

1. சிறுவிரலும் பெருவிரலும் தம்முட் கூட, ஒழிந்த மூன்று விரலும் விட்டு நிமிர்வது உன்னம் என்பர் அடியார்க்கு நல்லார். 'உன்ன நிலையே யுணருங் காலைப், பெருவிரல் சிறுவிர லென்றிவை யிணைய, வருமூறை மூன்று மலர்ந்துநிமிர் வதுவே' என்னும் இலக்கணம் ஈண்டு ஒப்புநோக்குதற் குரியதாம்.
2. கரும்பு வில்லை யுடைய மன்மதன்.
3. கணை மலர்-மலர்க் கணை, மலரம்பு.
4. உள் தமர் செய்தல்-உள்ளே துளையிடுதல்.
5. வாணி-கலைமகள்.

மற்றைய விரல்களை வானோக்க நிமிர்த்தலாம். இதன் தொழில்-எழுதுகோல் பிடித்தல், திருநாமம், சிந்தூரங் குழைத்தல், மன்மதன் மலர்க் கணை தொடுத்தல், உரையாணி பிடித் துரைத்தல், ஊசி பிடித்துத் துளையிடல், பெண்களின் குயத்தை நெருடுதல், மூக்கைச் சிந்தல், பூக்களை மோத்தல், முப்புரி நூல், ஞான முத்திரை, திரிகோணம், யோக பிரமாணங் காட்டல், மாலை தொடுத்தல், சரஸ்வதி முத்திரை காட்டல், நூற் கயிறு திற்றல், வியசன முற்றோர் துரும்பு கிள்ளுதல், நடராசரின் அங்கையின் அக்கினி காட்டல் முதலியவாம் -எ-று. (௩௪)

௩௫-வது அன்னவாய்க் கை.[1]

அன்னவாய் அங்குஷ்டம்[2] தற்சனி மத்திமை
உன்னுமூ விரலும் ஒடுக்கிச் சேர்த்து
அணிவிரல் கனிஷ்டம்[3] அகற்றிமே னோக்கிடல்
துணிவுட னிக்கரஞ் செய்தொழில் சொல்லின்
வெருகடி[4] பூமுகிழ்[5] விரும்பிக் காட்டிடல்
தருவுறை பிஞ்சினைச் சாற்றுதற் குவமை
முல்லை மல்லிகை முழுநீல மாம்பல்
புல்லிய நெய்தற் பூக்கள்நேர் காட்டல்
மங்கையர் கொங்கை வல்லுக்[6] கிணையிடல்
பொங்கமா மெழுகு பதம்புகன் றிடுதல்
தழுவிய மூவர் தம்முருக் காட்டல்
அழுகுறு கொட்டைப் பஞ்சினை யடக்கல்
உத்தம முத்திரை கைம்மணி யுலுக்கல்
நற்றமி ழின்சுவை நன்றுக் காட்டிடல்
அன்னப் பறவையின் அணிவாய் காட்டுதல்
என்ன முனிக்கிறை யியம்பின ரன்றே.

(இ-ள்) அன்னவாய்க் கை யென்பது-பெருவிரல், சுட்டுவிரல், நடுவிரல்களைச் சேர்த்து, மோதிரவிரல், சுண்டு

---

1. அன்னப் பறவையின் வாய் போன் றமைந்த கை யாதலின், அன்னவாய்க் கை எனப் பெற்றது.
2. அங்குஷ்டம்-பெருவிரல்.
3. கனிஷ்டம்-சிறுவிரல், சுண்டுவிரல்
4. வெருகடி-பூனையின் பாதம்.
5. அரும்பு. 6. வல்லு-சூதாடு கருவி.

விரல்களை விரித்து மேனோக்கப் பிடித்தலாம். இதன் தொழில்—வெருகடி யளவு காட்டல், பூ வரும்பு, இளம் பிஞ்சு, முல்லைப் பூ, மல்லிகைப் பூ, நீலோற்பலப் பூ, அல்லிப் பூ, நெய்தற் பூ, பெண்கள் ஸ்தனம், சொற் கேட்டான்[1], இவைகளுக்கு உபமானங் காட்டல், தைல முதலியவை காய்ச்சுகையில் மெழுகு பதம் பார்த்தல், கூடிய மும் மூர்த்திக ளுருவங் காட்டல், நூல் நூற்கும் பஞ்சுத் திரிக்கு உபமானங் காட்டல், உத்தம முத்திரை காட்டல், கைமணி யாட்டல். தமிழின் சுவை காட்டல், அன்னப் பக்ஷியின் வாயினைக் காட்டல் முதலியவாம்-எ-று. (௩௫)

௩௬-வது. முகிழ்க் கை[2]

முகிழ்க்கை தன்னை மொழியில் ஐ விரல்நுனி
வகைபெறக் கூட்டல் வருந்தொழி லுரைக்கின்
பஞ்ச பூதப் பண்பைக் காட்டிடல்
நெஞ்சி விருந்த நினைவினைக் கூறல்
தாமரை வாழைப் பூவினை சாற்றல்
மாமல ரெடுத்து வாதன்மேற் போடல்
அன்னத்தை வாரி யருந்திடல் அருளுடன்
பொன்னை யள்ளிப் பொருந்த வளித்தல்
பன்றி குதிரை பருமுகங் காட்டல்
மன்றல்சேர் குழலியர் வருமுலை காட்டல்
பொன்னுடை யவரெனப் பன்னிடற் கிதுவாம்
தோரணக் குஞ்சந் தொடுத்துக் காட்டல்
நேரெனக் குறுமுனி நிகழ்த்தினர் மாதோ.

(இ-ள்) முகிழ்க் கை யென்பது-ஐந்து விரல் நுனி களையுங் கூட்டலாம். இதன் தொழில்-பஞ்ச பூதக் கூட்டங் காட்டல், மார்பில் வைத்துத் தன் னெண்ணத்தைச்

---

1. இச் சொல் இக்காலத்தில் சொக்கட்டான் என வழங்கு கின்றது.
2. இதனை முகுளம் என்பர். முகுள மாவது ஐந்து விரலுந் தம்மில் தலைகுவிந்து உயர்ந்து நிற்பது. 'முகுள மென்பது மொழியங் காலை, யைந்து விரலுந் தலைகுவிந் தேற்ப, வந்து நிகழும் மாட்சித் தாகும்' என்பது அடியார்க்கு நல்லார் காட்டும் இலக்கணம்.

சொல்லல், தாமரைப் பூ, வாழைப் பூக்களைக் காட்டுதல், புஷ்பங்களை யெடுத்துக் கடவுளை அருச்சித்தல், அன்னத்தை வாரி யுண்ணல், பொன்னை இரவலர் முதலியோர்க்குக் கொடுத்தல், பன்றி, குதிரைகளின் முகத்தைக் காட்டல், ஸ்திரிகளின் குயங்களைக் காட்டல், பொன்னுடையோர்க்கு உபமானங் காட்டல், குஞ்சரங்களைக் காட்டல், முதலியவாம் - எ-று. (௩௬)

௩௭-வது. திரிலிங்கக் கை[1]

அறிவாய் கனிஷ்ட மணிவிரல் நடுவிரல்
செறியுற வளைத்து நேரே பெருவிரல்
உச்சியைத் தற்சனி நுனியி லூன்றி
உச்சித மணிக்கட் டுள்ளே வளைத்தல்
நறுவிய விக்கரத் துறுதொழி லுரைக்கின்
மறுவிய பெண்குறி தன்னை வகுத்திடல்
திருமிகு சிவலிங் கத்திணை செப்பல்
முக்கோ ணத்தின் முறைமையைக் காட்டல்
கொக்கு கோழி கூழைக் கடா[2] முகம்
உறுநே ரூசிநூல் தந்து நுழைத்திடல்
திறமிகு திரியைத் திரித்து நிமிர்த்தல்
உலையுறு மடையை[3] யுறுத்திப் பதஞ்சொலல்
தலமதிற் பயிர்க்குழி தனில்விதை யூன்றல்
என்றே குறுமுனி யியம்பின ரென்ப.

(இ-ள்) திரிலிங்கக் கை யென்பது -சுண்டுவிரல், மோதிரவிரல், நடுவிரல்களை வளைத்துப், பெருவிரல் நுனியையும், சுட்டுவிரல் நுனியையுங் கூட்டி, மணிக் கட்டை வளைத்தலாம். இதன் தொழில்-பெண்குறி, சிவலிங்கம், முக்கோணங் காட்டல், கொக்கு, கோழி, கூழைக்கடா, இவற்றின் முகத்துக்கு இணை காட்டல், ஊசியில் நூலைக் கோத்தல், திரி திரித்தல், சோற்றைப் பதம் பார்த்தல், பயிர்க் குழியில் விதையை யூன்றல் முதலியவாம் - எ-று. (௩௭)

---

1. பெருவிரல் குஞ்சித்துச் சுட்டுவிரல் முடக்கி ஒழிந்தவிரல் மூன்றும் நிமிர்ந்து வளைவது அராளக் கை என்பர் அடியார்க்குநல்லார். இத் திரிலிங்கக் கையும் அராளத்தியுல்புடன் ஒத்த இயல் புடையதாக எண்ணப் படுகின்றது.
2. கூழைக்கடா-நீர் வாழ் பறவையின் வகை.
3. மடை-சமைக்கப்பட்ட சோறு முதலியன.

திருக்குறள்

பொன்னுரைப் பகுதிகள்.

உரைகாரர் : கொக்குவில், திரு. வ. பொன்னையா, B.A. (Hons), Ph.D.

தவம்.

தவ மாவது, மனம் பொறிவழி போகாது, தன்வயப் பட்டு நிற்கும் பொருட்டு, ஊணுறக்கங்களைக் குறைத்தும், தன்னுயிர்க்கும், பிறவுயிர்கட்கும் உற்ற மூவகைப் பிறவித் துன்பங்களைப் பொறுத்தும், தான் அவற்றிற்குத் துன்பஞ் செய்தலைத் தவிர்த்தும், கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை யென்னும் நான்கு திறத்தானே, பதி, பசு, பாசம் என்னும் முப் பொருள்களின் பொது வியல்பு, சிறப் பியல்புகளை யுணர்ந்தும், சிவோகம் பாவனை யென்னும் உபாயத்தானே, வீடு பேறு முயறல். அதுதான், சரியை, கிரியை, யோகம், ஞானம் என நால்வகைப் படுமென்றும், இவற்றுள் ஒவ்வொன்றையும் மற்றையதனேடு உறழ, அது விரியான் பதினறு வகைப் படு மென்றும், இப் பதினறு வகையையும், உபாயம், உண்மை யென்னும் இரண்டோடு உறழ, அது முப்பத்திரண்டு வகைப்படு மென்றும், இவற் றுள்ளும் ஈண்டைக் கேற்புடையது, உண்மை ஞானத்திற் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்குமே யென்றுங் கொள்க.

இனிக், கேட்டல் முதலிய நான்கனுள், கேட்டலை, உண்மை ஞானத்திற் சரியை யென்றுஞ், சிந்தித்தலை, அதனிற் கிரியை யென்றுந், தெளிதலை, அதனில் யோக மென்றும், நிட்டையை, அதனில் ஞான மென்று மறிக. உபாயச் சரியையின் சரியை முதல் உண்மை ஞானத்தில்

ஞான மீருகிய முப்பத்திரண்டின் இயல்புகளைச் சிவஞான பாடியத்து, எட்டாஞ் சூத்திரத்து, முதலா மதிகரணத்திற் காண்க.

முன், அருளுடைமைச் சாதனங் கூறியவர், பின், அதற்குத் துணை செய்யும் புலான் மறுத்தற் சாதனத்தைக் கூறுதற்கண், கொல்லாமை மேற்கொண்ட புலான் மறுத்தற் சாதனமே அருளுடைமையை முடிவு போக்கு மென்று நுதலிவிட்டு; அவ் வருளுடைமையைத் துணைக் கொண்ட தவமே ஞான வாயிலாக வீடு பே றடைவிக்கு மென்பது கருதி, ஈண்டு தவத்தைக் கூறுகின்றா ரென்க.

> தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லா
> ரவஞ்செய்வா ராசையுட் பட்டு

இதன் பொருள்: தவஞ் செய்வார் தங் கருமஞ் செய்வார்—தவஞ் செய்வா ராவார், துறவை மேற்கொண்டு நின்று, தமக்கு நிலைபே றுடைய நன்மை பயக்குஞ் சிவோகம் பாவனை யாகிய தங் கருமத்தைச் செய்வார்; மற்று அல்லார் ஆசையுட் பட்டு அவம் செய்வார் - அவரல்லாத பிறர், பொரு ளின்பங்களில் ஆசை யாகிய வலையுட் பட்டுத், தமக்குக் கேடு செய்வார். ஆகலான், தவஞ் செய்க என்ற வாறு.

தங் கருமம் என்பது, நாலாம் வேற்றுமை யுருபும் பயனு முடன் றொக்க தொகை. அது தமக்கு நிலைபே றுடைய நன்மை பயக்கும் கருமம் எனும் விரிப் பொருளை யுணர்த்திச், சிவோகம் பாவனை யென்னுஞ் சாதனத்தைக் குறித்து நின்றது. மற்று, வினைமாற்றின்கண் வந்தது. பட்டு என்பது காரணப் பொருள் தந்து நின்ற செய்தெ னெச்சம். அல்லார் ஆசையுட் பட்டு அவஞ் செய்வா ரெனச் செய்தெனெச்சத் திறந்த காலம் பொருள் சிதையா மல், எதிர் காலத்து வந்தமையைச், 'செய்தெனெச்சத்

திறந்த கால, மெய்திட னுடைத்தே வாராக காலம்' என்னுஞ் சூத்திரத்தா னமைக்க. ஆகலான், தவஞ் செய்க என்பது, குறிப்பெச்சத்தாற் பெறப்பட்டது. தவஞ் செய்வா ராவார், தமக்கு நன்மை பயக்கும் கருமஞ் செய்வா ரெனவே, அல்லா ரென்றது, தவ மல்லாதன செய்வாரை யென்றும், இவர் தமக்குக் கேடு செய்வா ரென்றுங் கூறப் பட்டன. இனி, இவர் பொரு ளின்பங்களில் ஆசை யாகிய வலையுட் படுவா ரென்னுந் துணையானே, அவர் அவ் வலை யுட்படா ரென்பதை யுட் கொண்டு, அவர் துறவை மேற் கொண்டு நிற்பா ரெனவுங் கூறப்பட்டது.

பிறப்புப் பிணி, மூப்புச், சாக்காடுகளான் துன்ப மெய்தி வருகின்ற உயிர், அநாதியாலே தன்னைப் பற்றி நின்ற பாசப் பிணிப்பானே தனக்குத் துன்பங்கள் நிகழு கின்றன என்ப தாகிய உணர்ச்சி யெய்தி, அப் பாசப் பிணிப்பை நீக்கிக் கோடற் பொருட்டுத், தவத்தினைச் செய்து, தனக்கு நிலைபே றுடைய நன்மை யாகிய பாச வீடு, வீடு பேறுக ளாகிய பயன்கள் பயக்குங் கருமஞ் செய்யு மாகலான், தவஞ் செய்வாரைத் தங் கருமஞ் செய் வார் என்றும், தவஞ் செய்யாதார் நிலை யில தாகிய சிற்றின் பத்தின்கண் ஆசை யாகிய வலையுட்பட்டுப் பாவஞ் செய்வா ராகலான், அவரைத் தமக்குக் கேடு செய்வா ரென்றுங் கூறியவா றுயிற்று.

இக் குறளுக்குப் பரிமேலழகியார், 'தங் கருமஞ் செய்வா ராவார், துறந்து தவத்தைச் செய்வார்; அவரை யொழிந்த பொரு ளின்பங்களைச் செய்வார், அவற்றின் கண் ஆசை யாகிய வலையுட் பட்டுத், தமக்குக் கேடு செய்வார்' என்னும் உரையையும், தவத்தினைச் செய்ய, உயிர், ஞானம் பிறந்து, வீடு பெறு மாகலின், தவஞ் செய் வாரைத் தங் கருமஞ் செய்வா ரென்றும், அல்லாதாரை அவஞ் செய்வா ரென்றும் ஆசிரியர் கூறினார் என்றும் பொருள் பட உரை விளக்கத்தையுந் தந்தனர்.

முன் உரையில், தங் கருமஞ் செய்வா ராவார் தவத்தைச் செய்வார் என்று கூறியவர், பின் உரை விளக்கத்தில், தவஞ் செய்வாரைத் தங் கருமஞ் செய்வாரென்று ஆசிரியர் கூறினு ரென்பதற்கண், ஆசிரியர் கருத்தொடு தம் உடம்பாடு காட்டி நின்று, எழுவாய் பயனிலைகள் மலைவுபட உணர்ந்தா ராகலானும், இனித், தவ மென்பது பிற வுயிர்களை யோம்புதல் என இவ் வதிகார வெடுப்பிற் கூறிப் போந்தவர், ஈண்டு, அது ஞான வாயிலாக வீடு பேற்றை யுதவு மென்று கூறுதல், பிரவிருத்தி மார்க்க மாகிய, பிற வுயிர்களை யோம்புதல், நிவிருத்தி மார்க்கத்தானே யன்றிப், பெறக் கூடாத வீடு பேற்றை யளிக்கு மென்பதாகிச், சுருதி, அனுபவங்களுக்கு ஒவ்வாத தொன் ருகலானும், அழகியா ருரை உரை யின்மை யறிக.

இப் பாட்டு, பொரு ளின்பங்களுட் பட்டுக், கேடு விளைவிக்காது, பாச வீடும், வீடு பேறு மாகிய பயன்களடைய விரும்பின், தவஞ் செய்க. எ-று.

உ. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்க டவம்.

இ-ள்: துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி - புறத் துறவு பூண்டார்க்கு நுகரப்படும் பொருள்களை உதவல் விரும்பி, மற்றையவர்கள் தவம் மறந்தார் கொல் - புறத் துறவு பூணுதார் தாம் தவஞ் செய்தலை மறந் தொழிந்தரோ? அதனு லன்று. ஆகலான், தவஞ் செய்க. எ-று.

நான்க னுருபு அதற்கு வினை யுடைமை யென்னும் பொருட்டு. துப்புரவு - நுகரப்படும் பொருள்கள். அஃது அப் பொருட் டாதல், 'துப்புர வில்லார் துவரத் துறவாமை, யுப்பிற்குங் காடிக்குங் கூற்று' என்பதனுலு மறிக. வேண்டி என்பது காரணப் பொருளில் வந்த செய வெனெச்சத் திரிபு. கொல்-ஐயம். மக்கட் பிறப்பு எடுத்தா

ராகிய யாவராலும் எக் காரணத்தானும் மறத்தற்கரிய தவஞ் செய்தலை, அன்னார் இன்ன காரணத்தானே மறந்தா ரென்பதன்கண் ஐயம். அதனை, 'அன்றும் பாடுநர்க் கரியை யின்றும், பரணன் பாடினன் மற்கொன்' என்பத னானு மறிக. 'கொன் மற்றையவர்கள்' என்றும், அவ் வழிக்கண் லகாரம் னகார மானது வேற்றுமைப் பொருட் புணர்ச்சி இறுதிக்கண் அல் வழியது, எடுத்துக் கோடற் கண் சிங்க நோக்காக வைத்த 'மெல்லெழுத் தியையி னகார மாகும்' என்னுஞ் சூத்திரத்தா னென்க.

புறத் துறவு பூணாதா ராவார், யாவராலும் மறத்தற் கரிய தவத்தைச் செய்யாமைக்குக் காரணம் தருவா ராய் 'மறந்தார் கொல்' என்னு மோர் ஐயவுணர்வை யெழுப்பினு ரென்க. இதனால் யாது பயன் கருதினரோ வெனின், இவ் வுணர்வு ஒருதலையாக ஆராய்ச்சியுட் செலுத்தி, இஃது இவ் வகை யன்று, அவ் வகையே யென்னுந் துணிவின்கண் உய்க்கு மென்பதே.

இனிப், புறத் துறவு பூணாதா ராவார், துற வில்லாத அறத்தின்கண் ஒழுகுவாரும், இல்லி லிருந்து அகத் துறவை மேற்கொண்டு ஒழுகுவாரு மென இரு திறத்தார். அவருள், துற வில்லாத அறத்தின் நிற்பார்க்குத், தவஞ் செய்தற்கண் நினைவு முன் இல்லாமை பற்றி, அதனை அவர் மறத்தலும் மறவாமையும் உபசாரக் கூற்றுகையான், அன்னார் இன்ன காரணத்தான் மறந்தார்கொல் என்னும் ஐயம் ஏற்றிச் சொல்லும் வழக்காதல் பற்றி, அவர் தவத் தினைச் செய்யாமைக்குக் காரணம், மறத்தலன் றென்றும், அக் காரணந்தானும், மூல மலச் சார்பா னாகிய யானெனப் படுங் காண்பானும், என தெனப் படுங் காட்சியும், அதற்கு விடயமாய், என தெனப்படும் பொருளு மெனப் பகுத்துக் காணும் மயக்க வுணர்வை நீக்க நோக்காமையே யென்றுந் தாம் கருத லுரை யெனும் அளவைகளாற் றுணிந்ததை

யாமும் அவ்வாறே துணியுமாறு, 'மறந்தார் கொல்' என்னும் ஐய வுணர்வைத் தந்தா ரென்க.

இனி இல்லி லிருந்து அகத் துறவை மேற்கொண் டொழுகுவா ராவார், ஒரோவொருகால் புறத் துறவு பூண்டு நின்று, இறை பணி வழுவாது நிற்கும் அடியார்க்கு உண்டி முதலிய பொருள்களை அளித்து நிற்ற லுண்மையின், அன்னார் அவ் வளித்தற் கால மெல்லாம் வீடு பேறு பயக்குந் தவஞ் செய்தலை மறந்தனரோ வெனின், எல்லா வுயிர்கண்மாட்டும் பொது வகையான் பரிதன் மாத் திரையா னன்றி, அடியார் மாட்டுச் சிறப்பு வகையானுஞ் செய்யப்படும் வினைக ளெல்லாவற்றையும் அவ் வடியார் நெஞ்சி னின்ற சிவனே ஏன்று கொள்வா னென்பது பற்றி, அவ் வினைகள் அனைத்தும் அவரைப் பந்திக்கும் பசு புண்ணிய மாகாமல், ஞானத்தைப் பிறப்பித்து, வீடு வேறு அளிக்குஞ் சிவ புண்ணிய மாகு மென்றும், அன்னாரும் சிவமே தாமாய் நின்று, தானம் அளிப்பர் என்பது பற்றி, அவர் தானஞ் செய்யுங் கால மெல்லாந் தவஞ் செய்தலை மறவா ரென்றுந், தாம் கருத லளவை சார்பாக, ஆகம வளவையாற் றுணிந்ததை, யாமும் அவ் வகை துணியுமாறு, 'மறந்தார் கொல்' என்றா ரென்க.

இக் குறளுக்குப் பரிமேலழகர், 'இல்லறத்தையே பற்றி நிற்பார், துறந்தார்க்கு உண்டியும், மருந்தும், உறையுளு முதலவை விரும்பித் தாம் தவஞ் செய்தலை மறந்தார் போலும்' என்னும் உரையையும், 'வேண்டிய வேண்டியாங் கெய்தற் பயத்த தாகலின், யாவரானுஞ் செய்யப்படுவ தாய தவத்தைத், தாஞ் செய்யுந் தானத்தின்மேல் விருப்ப மிகுதியான் மறந்தார் போலு மெனவே, தானத்திற் றவம் மிக்க தென்பது பெற்றும்' என்னும் உரை விளக்கத்தையுந் தந்தனர்.

துப்புரவு ஏற்பா ராவார், புறத்துறவு பூண்டாரே யாதல் பற்றித் துறந்தா ரென்றது, புறத் துறவு பூண்

டாரை யென்றும், இதனுனே, 'மற்றையவர்கள்' என்றது, துற வில்லாத அறத்தின்கண் ஒழுகுவாரும், இல்லி லிருந்து அகத் துறவை மேற்கொண் டொழுகுவாரு மாகிய புறத் துறவு பூணுதாரையே யென்றுங் கொள்ளக் கிடப்ப, இவருள் ஒரு சாராராகிய இல்லறத்தையே பற்றி நிற்பா ரையே குறிக்கின்றது 'மற்றையவர்கள்' எனல் குன்றக் கூற லாகலானும், இனி 'வேண்டிய வேண்டியாங் கெய்தற்' பயத்த தாதல் பற்றித், தவம் தானத்தின் மிக்க தென்பது, இப் பாட்டாற் பெற்ரு மெனக் கருதிஞ ரெனின், அஃது இப் பாட்டாற் பெறப்படாத தொன் றென்று, 'வேண்டி யாங்கு' என்ற ஆட்சியானே காட்டி வைத்துத் தங் கருத்தையே மறுத்தா ராகலானும், அழகியா ருரை போலி யுரை யென்க.

இப் பாட்டு என் னுதலிற்ருே வெனின், யான், எனது எனும் மயக்க வுணர்வை நீக்கிக் கொள்ள விரும்பின், தவஞ் செய்க எ-று.

தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை
யஃதிலார் மேற்கொள் வது.

இ-ள்: தவ முடையார்க்கு தவமும் ஆகும் — முற் றவ முடையார்க்குத் தவமும் உண்டாகும்; அத் தவங் காரண மாகப் பயன் கோடலும் உண்டாகும். அதனை அஃதிலார் மேற்கொள்வது அவம் — அத் தவத்தை அம் முற் றவ மில் லாதார் முயறல், மறுமைக்கண் வீடு பே ருகிய பயனை உதவா தென்பது பற்றி, பய னின் முயற்சி யாகும்; ஆதலான், தவஞ் செய்க. எ-று.

உம்மை ஆக்க வும்மை. தவமு மாகும்; அத் தவத்தி ஞல் பயன் கோடலு மாகும் என்றபடி; எதிரது போற்றிய வெச்ச வும்மை யெனினு, மமையும்.

முன்னைப் பிறவிகளில், வீடு பேற்றைக் காதலித்துத், தவஞ் செய்தா ராவாரே, தாம் முற் செய்த தவங் காரண மாகத் தவஞ் செய்யும் நற் சார்பில் வந்துதித்து, அறிவும்,

ஆற்றலும் உடையராய்ப், பின்னருந் தவத்தின் முனைந்து நின்று, ஞான வாயிலாக மறுமைக்கண் வீடு பேறடைவ ரென்பது உணர்த்துதற்குத் தவமுந் தவமுடையார்க் காகு மென்றும், அம் முற் றவ மில்லாதார் தவத்தினல் பயன் கோடல் வேண்டின், படி முறையா னன்றி, ஒரு பிறவியிற் செய்யப்படுந் தவத்தானே யமையா தென்பது கூறுவா ராய், 'அவமதனை யஃதிலார் மேற்கொள்வ' தென்றுங் கூறினு ரென்க.

இக் குறளுக்குப் பரிமேலழகர், 'பயனே யன்றித் தவந்தானும் உண்டாவது முற் றவ முடையார்க்கே ஆக லான், அத் தவத்தை அம் முற் றவ மில்லாதார் முயல்வது பய னின் முயற்சியாம்' என்னும் உரையையும், 'பரிசயத் தால் அறிவு மாற்றலு முடையராய் முடிவு போக்கலின், தவ முடையார்க் காகு மென்றும், அஃ தில்லாதார்க்கு அவை யின்மையின், முடிவு போகாமையின் அவமா மென் றுங் கூறினர்' என்னும் உரை விளக்கத்தையுந் தந்தனர்.

தவமும் தவ முடையார்க் காகும் என்பதற்குப் 'பயனே யன்றித்' தவந் தானும் உண்டாவது முற் றவ முடையார்க்கே' என்று பொருள் கொண்டமையின், உம்மையை இறந்தது தழீஇய வெச்ச வும்மை யாகவும், பயனை முற்றவத்தின் பயனுகவுங் கருதினு ராதல் வேண்டும். ஆயின், முற் றவ முடையார்க்கு அவ் வுடைமை அறிவு மாற்றலு மாகிய பயன்களை ஈந்து, அவரைத் தவத்தின்கண் உய்க்கு மென்பதே, தவமும் தவ முடையார்க் காகும் என்பதனுற் பெற லாகு மொழிய, பரிசயத்தால் அறிவு மாற்றலு முடையராய், முடிவு போக்குவர் என்பது பெறப்படாமை காண்க. இதனைப் பெற விரும்பின், உம்மையை ஆக்க வும்மை யாக வாவது, எதிரது போற்றிய வெச்ச வும்மை யாக வாவது கொள்ளல் வேண்டு மென்ப தும் அறிக.

இப் பாட்டு என் நுதலிற்றோ வெனின், தவஞ் செய்வாருள், முற் றவ முடையார் மறுமைக் கண்ணும், அஃதிலார், அடுத்த பிறவிகளுள் ஒன்றன்கண்ணும் வீடுபே றடைவர்; ஆகலான், தவஞ் செய்க. எ-று.

(தொடரும்.)